
# தியானச் சோலை

சாமுவேல் பவுல்



# தியானச் சோலை

சாமுவேல் பவுல் ஐயர்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை

*Published by*
THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX NO. 501, PARK TOWN, MADRAS - 3

**THIĀNAC SOLAI**
BY REV. SAMUEL PAUL

© CLS

*First Printed, 1963*
*Reprinted, 1996*

Printed at THE C.L.S. PRESS, Madras—7. L 5845

# போதனை

சிநேகிதனே அல்லது சிநேகிதியே! இம்மட்டும் நீ உனக்கிஷ்டமான பேச்சிலோ அல்லது வேலையிலோ இருந்தாயல்லவா? அவைகளைச் சற்றுநேரம் நிறுத்திவைத்து, தியானச் சோலைக்குள் போகப் புறப்படுவாயாக. நீ உலகத்துக்கும், அதின் வழிபாடுகளுக்கும் இடம்கொடுத்து அலுத்துப் போனாய். நீ இளைப்பாற வேண்டியது அவசியம். என்னோடு கூட நீ தியானச் சோலைக்கு வருகிறது நிச்சயமானால், நாம் இருவரும் அங்குள்ள ஜீவநதியில் ஸ்நானம்செய்து, நம்முடைய அங்கிகளையும் வெளுத்துக் கடைசியாக, ஒரு விருந்து மண்டபத்துக்கும் போய், ருசியுள்ள மன்னாவையும் தெளிந்த திராட்சரசத்தையும் அருந்தி, களையாறி, பலப்பட்டுத் திரும்பிவிடலாம்.

# பதிப்புரை

சீமுவேல் பவுல் ஐயரின் 152 ஆம் பிறப்பாண்டு ஜூன் 15 ஆம் தேதி நிறைவுறுவதை ஒட்டி அவருடைய சில நூல்களை மீண்டும் வெளிக்கொணரும் திட்டத்தின்படி இந்நூல் வெளியிடப்படுகின்றது.

மூன்று நான்கு தலைமுறையினர் வாசித்துப் பயனடைந்து வந்திருக்கும் இந்நூல் உங்களுக்கும் நலம் பயப்பதாக அமைய ஆண்டவர் அருள்புரிவாராக.

**அருள்திரு. டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்**
பொதுச் செயலாளர்
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை

ஜூன் 11, 1996
சென்னை

# ராவ் சாஹிப் சாமுவேல் பவுல் ஐயரவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

கனம் சாமுவேல் பவுல் ஐயரவர்கள் திருநெல்வேலி மாவட்டம் தென்கரையைச் சேர்ந்த பாட்டக்கரை என்னும் கிராமத்தில் 1844ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி பிறந்தார். இக்கிராமம் மெஞ்ஞானபுரத்திற்கருகில் உள்ளது. நிலவளம், நீர் வளம் பொருந்தி, மாந்தோப்புகள் அடர்ந்த செழிப்பான ஒரு சிற்றூர். இவருடைய தந்தையார் கனம் தானியேல் பவுல் ஐயரவர்கள். சிறந்த பக்தன். வைராக்கிய பிரசங்கி. புகழ்பெற்ற மிஷனெரியாகிய கனம் ஜே. தோமாஸ் ஐயரவர்கள் இவருடைய பிரசங்கங்களைக் கேட்டு எழுப்புதலடைந்து கூறியதாவது: ''பவுல் தானியேல் ஐயர் செய்யும் பிரசங்கங்களைப்போலொத்த பிரசங்கங்கள் லண்டன் பட்டணத்துப் பொறபங்களில் செய்யப்படுமாகில், ஆலயங்களில் இடம் காணுதேபோம். ஒருவேளை இந்தியாவில் எழும்பின குருக்களில் இவர்தான் மகோன்னத பிரசங்கியாயிருக்கலாம்.''

இச் சிறந்த பக்தனின் பதினொரு பிள்ளைகளில் சாமுவேல் பவுல் ஐயர் ஆருவது பிறந்த ஆண் மகன். இவருக்கு முந்தின ஐந்து பேரும் பெண்கள். சாமுவேல் பவுல் ஐயர் இளமையில் தம் தந்தையார் உபதேசியார் அலுவல் பார்த்த கிராமத்தில் மூலாதாரக் கல்வி கற்றுக்கொண்டார். வேத அறிவைப் பெருக்கி வந்தார். மெஞ்ஞானபுரம் கலாசாலையில் கனம் ஜே. தோமாஸ் மிஷனெரியின்கீழ் உயர்தரக் கல்வி கற்ருர். பாளையங்கோட்டையில் கனம் சார்ஜென்ற் மிஷனெரியின்கீழ் வேத சாஸ்திரக் கல்வி பெற்ருர். பின்னர் சென்னப்பட்டணத்தில் கனம் சத்தியநாதன் ஐயரவர்களின்கீழ் உபதேசியாராகச் சிறந்த பணியாற்றினுர். திருநெல்வேலி அத்தியட்சாதீன குருவாகிய கனம் பரமானந்தம் சிமியோன் ஐயரவர்களின் குமாரத்தியை 1868ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 6ஆம் தேதி அன்பினகரம் என்னும் கிராமத்தில் மணம்புரிந்து மீண்டும் சென்னப்பட்டணத்திற்கே தேவ ஊழியம் செய்யும்படி வந்தார். 1871இல் குருத்துவ ஊழியத்திற்கெனத்

தெரிந்துகொள்ளப்பட்டு, அதற்குரிய பரீட்சைகளில் முதல்தரமாகச் சித்திபெற்று, 1874ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் தேதி மகா கனம் ஜெல் அத்தியட்சரவர்களால் திருச்சிராப்பள்ளி எஸ்.பி.ஜி. ஆலயத்தில் குருப்பட்டம் பெற்று, உதகமண்டலம் சி.எம்.எஸ். சபைக்குக் குருவாக நியமிக்கப்பட்டார். அதற்குப் பின்னுள்ள ஊழியத்தை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்: (1) மலை ஊழியம், (2) நகர ஊழியம், (3) நாட்டுப்புற ஊழியம்.

**உதகமண்டலம்:** (1) மலை ஊழியம் (1874-1883). உதகமண்டலத்துத் தமிழ்ச் சபையில் ஒன்பது வருடங்கள் அதிக ஊக்கத்தோடும் பிரயாசத்தோடும் உழைத்துக் கடைசியாக மரணத்துக்கேதுவான வியாதிநிலையுண்டாகி அநேக நாள் ஆஸ்பத்திரியிலிருந்து சற்று சுகமானபின் நீலகிரி மலை அவருக்கு ஒத்துக்கொள்ளாதென்று வைத்தியர் அபிப்பிராயப்பட்டதால் அவ்விடத்தை விட்டு சென்னப்பட்டணத்துக்கு மாற்றப்பட்டார். நீலகிரியிலிருக்கையில், உவைநாடு சபையை **(Wynaad Mission)** ஸ்தாபித்துக் கவனித்து வந்தார். 1882ஆம் வருஷம் கள்ளிக்கோட்டையில் சிதறியிருந்த தமிழ்ச் சபை அங்கத்தினரை ஒன்றுசேர்த்து அச்சபையை ஸ்திரப்படுத்தினர். அங்ஙனமே குன்னூரிலும் சர்ச் மிஷன் சபையை ஸ்தாபித்தார். உதகமண்டலத்தில் ஐரோப்பியருடைய வீடுகளில் வேலைசெய்யும் வேலைக்காரருக்குப் பிரசங்கிக்கும்படியாக வேலைக்காரர் மிஷன் **(Servants' Mission)** என்று ஓர் மிஷன் ஏற்படுத்தி, அதற்கு ஒரு உபதேசியாரை நியமித்து அவருடைய சம்பளம் முழுவதும் மிஷனில் பொறுக்காதபடிக்கு ஒவ்வொரு துரைமார் வீட்டிலும் மாதம் 1 ரூபாய் வீதம் வசூல்செய்து உபதேசியாருடைய சம்பளத்தில் பாதி அவ்விதமாய்க் கிடைக்கும்படி ஒழுங்குசெய்தார். இதர மதஸ்தருக்குக் கிறிஸ்து மார்க்கத்தைப் பிரசங்கிப்பதற்குப் பற்பல முறைகளைக் கையாடி வந்தார். ஹோபார்ட் பாடசாலையில் இரண்டு வாரத்துக்கொரு தடவை தமிழிலாவது இங்கிலீஷிலாவது இதர மதஸ்தருக்கு விசேஷ பிரசங்கம் செய்து பிரசங்கம் முடித்த பின் கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சந்தோஷமாய் விடையளிப்பார். வாரந்தோறும் சந்தைக்கூட்டங்களில் புறமதஸ்தருக்கென்று

பிரசங்கம் நடத்துவார். மாதத்துக் கொருமுறை பௌர்ணமி தின இரவில் சதுர்ப் பிரசங்கம் செய்வார். அடிக்கடி சிறைச்சாலேக்குச் சென்று அங்கிருக்கும் கைதிகளுக்குப் பிரசங்கம் செய்வார்.

**சென்னையில் குருத்துவ ஊழியம்:** (2) நகர ஊழியம் (1883-1887). சென்னப்பட்டணம் டக்கர் கோவிலுக்கு 1883ஆம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியில் குருவாக நியமிக்கப்பட்டு அதிக உண்மையோடும் ஊக்கத்தோடும் தேவ ஊழியத்தை நடப்பித்தார். இவர் நடத்திவந்த ஆராதனைகளும் பிரசங்கங்களும் அதிக பக்தி விநயமும் எழுப்புதலுமுள்ளவைகளாயிருந்தன. இவர் காலத்தில் தான் பாடகர்கள் நியமிக்கப்பட்டுக் கின்னர வாத்தியத்தோடு ஆராதனைகள் முதல் முதல் நடத்தப்பட்டன. இளைப்பாறும் நேரமெல்லாம் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு எழுப்புதலும் பிரயோஜனமுமான நூல்களைத் திரளாக எழுதினர். இதனால் தமிழ்ச் சபையோரெல்லாம் ஐயருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

**சாட்சியாபுரம்:** (3) கிராம ஊழியம் (1887-1900). இது வட திருநெல்வேலி சபையை விசாரணைசெய்த காலத்தைக் குறிக்கும். வட திருநெல்வேலிக்காகத் தன் ஜீவனைக்கொடுத்த கனம் ராக்லாண்டு ஐயருடைய கல்லறை இந்நாள்வரையும் கிறிஸ்துவின் சுவிசேஷத்து ஞாபகஸ்தம்பமாக விளங்கிநிற்கும் சிவகாசியென்னும் ஊருக்கருகிலுள்ள சாட்சியாபுரம் என்னும் கிராமத்தில் அவர் தம் கிராம ஊழியத்தை ஆரம்பித்தார். சாட்சியாபுரம், வாகைக்குளம் ஆகிய இரண்டு வட்டாரங்களுக்கும் தலைவராக நியமிக்கப்பட்டு மரணபரியந்தம் அங்கேயே தங்கி மிக ஆர்வத்துடன் திருப்பணியாற்றினர். தவச உற்சவத்தை ஏற்படுத்துவதற்கு முதல் முதல் ஆலோசனை சொன்னவர் இவரே. இவருடைய ஏற்பாட்டின்படிதான் தவச உற்சவம் நம் நாட்டில் முதல் முதலாக 1891ஆம் வருடம் ஜூன் மாதம் சாட்சியாபுரத்தில் கொண்டாடப்பட்டது.

**இதர தொண்டு:** 1890ஆம் வருஷம் முதல் 'நற்போதகம்' என்னும் மாதாந்தர தமிழ் பத்திரிகைக்குப் பத்திராதிபராயிருந்தார். 1894ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி சென்னை அத்தியட்சரவர்கள் இவரை ஆனரெரி சாப்பிளஞக (Honorary Chaplain) நியமித்தார். திருநெல்வேலி சபைகளைக் கண்காணித்து வந்த கனம் மோர்ளி (Bishop Morley) அத்தியட்சரவர்களுக்கும் இவர் ஆனரெரி சாப்பிளஞகவிருந்தார்.

**ராவ் சாஹிப் பட்டம்:** சபையின் வாழ்வை வெகுவாய்க் கருதியிருந்ததுமல்லாமல் இராஜாங்க விஷயமாகவும், பொதுஜன நன்மைக்காகவும் பலவாறுகத் தம்மால் கூடியமட்டும் உழைத்து வந்தார். சிரிவிலிப்புத்தூர் தாலூகா போர்டு மெம்பராகவும், திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராகவும் நியமகம் பெற்று அச்சங்கங்களில் நல்ல ஆலோசனை கொடுத்துவந்தார். பிரஜை களின் நன்மைக்கென்று இவர் எழுதிய அபரிமிதமான புத்தகங்களை நன்கு மதித்து இந்தியாவின் கவர்னர்-ஜெனரலவர்கள் 1898ஆம் வருஷம் இவருக்கு ''ராவ் சாஹிப்'' (Rao Saheb) என்னும் பட்டம் கொடுத்துக் கனப்படுத்தினுர்கள். இந்தியாவில் இந்தக் கவுரவத் தைப் பெற்றுக்கொண்ட முதலாவது சுதேச குரு இவரே.

இவர் மரிப்பதற்கு முந்தின வருடமாகிய 1899ஆம் வருஷம் மே, ஜூன் மாதங்களில் சிவகாசியில் பெருத்த கலகங்களும் கொள்ளைகளும் உண்டாகி, அனைவரும் கலங்கி நிற்கையில், கலகத்துக்குத் தளகர்த்தஞயிருந்தவனேடு இவர் சமாதான உடன் படிக்கை செய்து சாட்சியாபுரத்தையும் அதிலிருந்த கிறிஸ்தவர்களை யும் தற்காத்தார்.

**இறுதிக் காலம்:** தமிழ்க் கிறிஸ்தவச் சபையின் உள்ளான ஆவியின் வளர்ச்சியைக் கருதிக் கிறிஸ்துவைப்போல் ஜீவித்தல் (Imago Christi) என்னும் ஓர் அருமையான புத்தகத்தை எழுத எண்ணங்கொண்டு ஆறு மாத காலமாய் அதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடி, ஆழ்ந்த யோசனையுடன் அதை எழுதிக் கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென்று 1900 வருஷம் மார்ச்சு

மாதம் 4ஆம் தேதி ஞாயிறு காலை ஜுரம் ஆரம்பித்து, கபால வியாதியும் அத்துடன் இருமலும் கலந்து, வைத்தியர்களின் பிரயாசத்துக்கு வியாதி அடங்காமல், மார்ச்சு மாதம் 11ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் ஒரு மணிக்குச் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் தம் பரம இளைப்பாறுதலுக்குட் பிரவேசித்தார். வியாதி ஆரம்பிக்கிற கடைசி நேரம் வரை தம் வேலையில் மிக ஊக்கமுள்ளவராயிருந்தார். வியாதிப்படுவதற்கு முந்தின தினமாகிய சனிக்கிழமை இரவு சுமார் 12 மணிக்குத் தம் சபையைச் சேர்ந்த சில வியாதியஸ்தரைச் சந்தித்து, அவர்களுக்கு உதவி புரிந்து, அவர்களோடு ஜெபம் செய்தார். இதுவே அவருடைய குருத்தொழிலின் கடைசி ஊழியம்.

**மரணப்படுக்கை:** அவர் மரிப்பதற்கு முன் செய்த கடைசி ஜெபத்தில் ஆண்டவரே சிறு வயது முதல் என்னை உமது ஊழியத்தில் அமர்த்தி இதுவரையில் என்னில் உம்முடைய நாமம் மகிமைப்படக் கருணைகூர்ந்தீர். இப்போதும் என்னை உமது சமுகத்துக்கழைத்துக்கொள்ளச் சித்தங்கொண்டீர். ஆனால் இன்னும் சில காலமாத்திரம் ஜீவித்திருப்பேனானால் நான் இயற்றத் துவக்கின இரண்டு புத்தகங்களை (Imago Christi and Imitation of Christ) முடித்துத் தேவரீருடைய சந்நிதி சேர சந்தோஷத்தோடு எதிர்நோக்கியிருப்பேன். ஆயினும் என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது என்றார். கடைசியாக அருகிலிருந்த தமது உடனூழியனாகிய அருளப்பன் உபாத்தியாயரைப் பார்த்துத் தம் வீட்டைச் சுட்டிக்காட்டி, சகோதரனே, இந்தக் கூரையைப் பார்த்தீரா? என்ன கேவலமாயிருக்கிறது! இது என் வீடல்ல. நான் போகும் மாளிகைக்கு இது ஈடாகாது. இதைப் பார்க்கிலும் மிக அலங்காரமான மாளிகை எனக்கு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்துக்கு நான் போக வேண்டும்; கோவில் மணியடிக்கிறது; கோவிலுக்கு நான் போகிறேன் என்று சொன்னார். இதுதான் அவருடைய கடைசி வார்த்தை. தம் அருமை மனைவி அவரிடம் வந்து தனக்கு என்ன சொல்லப் போகிறீர்கள் என்று கேட்க, தன் கையை உயர்த்திக் காட்டிக் கண்ணை மூடினார். அதன்பின் அவர்

மனதிலே ஜெபித்து அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும் வாய்க்குள் சொல்லி முடித்தார். உடனே அவருடைய ஆவி அகமகிழ்வுடன் ஆகாயப் பிரவேசமாயிற்று. மரித்தபின் அவருடைய முகத்தில் காணப்பட்ட முகமலர்ச்சியும், சந்தோஷமும், அழகும் அனைவரையும் பிரமிக்கச் செய்தன. இவருடைய சரீரம் சாட்சியாபுரம் கோவிலைச் சேர்ந்த கல்லறைத் தோட்டத்தில் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறது. பாளையங்கோட்டை அத்தியட்சாலயத்தில் ஒரு ஞாபகார்த்த கல்லும் பதிக்கப்பட்டிருக்கிறது.

அவர் எழுதிய 16 சிறந்த நூல்களில் ''ஆத்தும நேசரின் அங்க மகத்துவ''மும், மொழிபெயர்த்த 26 நூல்களில் ''மோட்சப் பிரயாணம்'' என்னும் புத்தகமும் இன்றுவரை மிக அருமையாக மதிக்கப்பட்டு வருகின்றன. பவுல் ஐயர் மரித்தும் இன்னும் பேசுகிறார் என்று உண்மையாகவே சொல்லலாம்.

# I. வழிநடைப் போதனை

சிநேகிதனே, இதோ, நாமிருவரும புறப்படுவோம். நடந்துவா, நாம் தியான சோலைக்குள் போகுமுன் அறிய வேண்டிய அநேக விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொள்வது நலம். ஏனெனில் அந்த ஸ்தலம் சாதாரணமான ஒரு சோலை யல்ல. அங்குள்ள நதியும், விருட்சங்களும், கனிகளும், அங்கு வீசும் காற்றும், எரிக்கும் வெயிலும், அங்கு பேசும் பாஷையும், பாடும் கீதமும், உண்ணும் உணவும் மாம்ச சம்பந்தமானதல்ல. அவையெல்லாம் ஆவிக்குரியவைகளா யிருக்கின்றன. சாதாரண கிறிஸ்துமார்க்கம் போதாது. ஏனெனில் அந்த சோலையின் விருந்து மண்டபத்திலிருக்கிற ஒரு காவற்காரன், 'கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத் தில் தங்குவான்! யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ணுவான்? உத்தமனாய் நடந்து நீதியை நடப்பித்து மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன் தானே' என்று விளம்பரம் அடித்துக்கொண்டே நிற்கிறான் என்று சொல்ல லாம் (சங். 15:1,2). தியான சோலைக்குள், உனக்குக் கிடைக்கும் எல்லா வாழ்விலும் விருந்துண்பதே பெரிய வாழ்வாயிருக்கிறது. அந்தப் பெரிய வாழ்வை நீ பெற்றுக் கொள்ள வேண்டுமானால் தகுந்த ஆயத்தத்தோடே அதற்குள் பிரவேசிக்கவேண்டியது அவசியம். நீ உன் இஷ்டத்தை இன்று எனக்கு ஒப்புவித்துவிடுவாயானால், நான் அதற்குரிய பொதுவான குறிப்புகளையும் போதனைகளையும் உனக்கு உணர்த்தி, உலக சிந்தையிலிருந்து உன் மனதைப் பிரித்து, தியான சோலைக்கு நேரே திகையாமல் நடத்தக்கூடுமென்று நம்புகிறேன்.

## திருவிருந்துபதேசம்

பரிசுத்த இராப்போஜனம் என்னும் திருவிருந்து, கிறிஸ்து பலியாக அடைந்த மரணத்தையும், அதினாலே

நாம் பெற்றுக்கொள்ளுகிற நன்மைகளையும், நாம் இடைவிடாமல் நினைவுகூருகிறதற்காக, கிறிஸ்துநாதரே ஏற்படுத்தியிருக்கிற ஒரு நியமமாயிருக்கிறது. இந்த விருந்தில் பங்குபெறும்படி ஆசிக்கிறவர்கள், துணிந்து சேராமல், யாவரும் தங்களை நன்றாகச் சோதித்து அறிந்து சேரவேண்டும். ஏனெனில் பரி. பவுல் 'எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக் கடவன்' என்று எச்சரித்திருக்கிறார் (1 கொரி. 11:28).

இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியில் இதை முதலாவது ஸ்தாபித்து, 'என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்' என்று கட்டளையிட்டார். அதுமுதல் இந்த முறைமை கிறிஸ்துசபையில் ஆசரிக்கப்பட்டுவருகிறது. பூர்வத்தில் இது நாள்தோறும் நடத்தப்பட்டுவந்தது என்பது நிச்சயம். ஆதிக் கிறிஸ்தவர்கள் 'ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம் பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி வந்தார்கள்' என்று அறிகிறோம் (அப். 2:46).

இந்தத் திருவிருந்தில் சேருகிறவர்கள் பாவத்தினிமித்தம் மெய்யாய் துக்கப்படுகிறவர்களாகவும், புது ஜீவமார்க்கத்தில் நடக்க உறுதியாய்த் தீர்மானித்தவர்களாகவும், இயேசுவின்மேல் உயிருள்ள விசுவாசம்வைத்து அவருடைய மரணத்தை நன்றியறிதலோடே நினைவுகூருகிறவர்களாகவும், எல்லா மனிதரிடத்திலும் அன்புள்ளவர்களாகவுமிருக்க வேண்டும். மேலே காட்டிய லட்சணங்களோடு நாம் இந்தப் பரிசுத்த பந்தியில் சேருகிறதுண்டானால் நமது ஆத்துமாவுக்குண்டாகும் பிரயோசனம் பெரியதாயிருக்கும். இப்படிப்பட்ட குணங்களில்லாமல் அத்திருவிருந்தைப் பெறுவதால் மோசமும் பெரிதாயிருக்கும். 'எவன் அபாத்திரமாக கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனாயிருப்பான்' என்றும் 'அபாத்திரமாய் போஜனபானம் பண்ணுகிறவன்

கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததால் தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான்' என்றும் பரி. பவுல் அறிவித்திருக்கிறார் (1 கொரி. 11:27,29). அதுவுமன்றி, இந்தத் திருவிருந்தில் அபாத்திரமாய்ப் பங்கு பெற்றதினிமித்தம், 'அநேகர் பலவீனரும், வியாதியஸ்தருமானதோடு பலர் மரித்தும்போனார்கள்' என்று அவரே எழுதுகிறார் (1 கொரி. 11:30).

நாம் இந்தத் திருவிருந்தால் நஷ்டத்தையல்ல, லாபத்தை அடையும்படி, பாத்திரவான்களாய் அதில் பங்கு பெறுவது தகுதியாயிருக்கும். அதற்குதவியாகப் பின்வரும் பிரதான சத்தியக் குறிப்புகளை அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

# 2. ஞானக் கல்விகள்

## 1. ஜெபம்

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

கவனிப்பு:—இந்த ஜெபத்தைச் செய்யும்பொழுதெல்லாம் தேவன் உன் பிதாவென்றும்; அவர் தமது பரிசுத்த நாமத்தால் மாத்திரம் இவ்வுலகத்தில் அறியப்படுகிறாரென்றும்; அவருடைய ஆளுகை உலகமெங்கும் பிரபலமாகிறதால் பிசாசின் ஆளுகை அற்றுப்போக வேண்டுமென்றும்; தேவசித்தம் பரலோகத்தில், தேவதூதரால் எவ்வளவு பூரணமாக நிறைவேற்றப்படுகிறதோ

அதுபோல இந்த உலகத்தாரும் அதை நிறைவேற்றவேண்டிய வர்களாயிருக்கிறார்கள் என்றும்; அன்றன்று சரீரத்துக்கு வேண்டிய அப்பத்தைக் கேட்கும்போது, அன்றன்று இயேசு என் ஞான போசனம் என்றுணர்ந்து அதை நாடவேண்டும் என்றும்; பிறர் குற்றங்களை மன்னித்தாலின்றி நமது குற்றங்கள் தேவனால் மன்னிக்கப்படமாட்டாதென்றும்; நாம் பாவம் செய் யாதபடி தேவனே தமது ஆவியால் நம்மைக் காத்து ஆதரிக்க வேண்டுமென்றும்; நமது தேவனாகிய பிதாவுக்கே சகல ராஜ்ய மும் வல்லமையும், என்றென்றைக்கும் உரித்தாயிருப்பதால், நாம் கருத்தோடு இந்த ஜெபத்தின் மூலமாய்க் கேட்கும் எல்லா காரியங்களையும் அவர் நமக்குக் கடாட்சம் பண்ணுவாரென்றும் உணர்ந்துகொள்ளவேண்டியது. இவை போலொத்த உணர்ச்சி யும் அறிவுமின்றி கர்த்தருடைய ஜெபத்தைச் செய்வது ஆத்து மாவுக்கு லாபமாயாவது, ஆவிக்கு அனலாயாவது இருக்க மாட்டாது.

கிறிஸ்துவானவர் படிப்பித்த கர்த்தருடைய ஜெபமானது கிறிஸ்துமார்க்க ஜெபங்களுக்கு ஆதாரமும் அஸ்திபாரமு மாயிருப்பதால், அதை அதன் பொருளோடு உணர்ந்து ஜெபிப்பது நியாயமாயிருக்கிறது.

## 2. விசுவாசம்

இந்தத் திருவிருந்தில் பங்குபெறுகிறவன் கிறிஸ்துமார்க் கத்துக்குரிய பிரதான சத்தியங்களை விசுவாசிக்கிறவனா யிருக்க வேண்டியது. அச்சத்தியங்களாவன:—

(1) ஒரே தேவன் உண்டு. அவர் வானத்தையும், பூமியை யும் படைத்தார், அவர் சர்வ வல்லமையுள்ளவர்; அவர் எனக்குப் பிதாவாயிருக்கிறார்.

(2) ஒரே இரட்சகர் உண்டு. அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரனாயிருக்கிறார், அவர் பேர் இயேசு கிறிஸ்து; அவர் பரிசுத்த ஆவியால் கன்னிமரியம்மா ளிடத்தில் பிறந்தார். அவர் சிலுவையில் பாடுபட்டு, மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிரோடெழுந்து, பின்பு பரலோகத்துக் கெழுந் தருளி பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

அவர் மனுமக்களை நியாயந்தீர்க்கும்படி திரும்பவும் வருவார்.

(3) பரிசுத்த ஆவியும் உண்டு. அவர் கர்த்தருமாய் ஜீவனைக் கொடுக்கிறவருமாயிருக்கிறார்; அவர் என்னையும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட எல்லா ஜனங்களையும் பரிசுத்தம் செய்துவருகிறார்.

(4) பொதுவான பரிசுத்த சபையுண்டு.

(5) பாவமன்னிப்பும் சரீர உயிர்த்தெழுதலும் நித்திய ஜீவனுமுண்டு.

(6) ஆத்துமரட்சிப்படைவதற்கு அவசியம் வேண்டியதெல்லாம் பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியிருக்கிறது; ஆகிய இவைகளே.

இந்த விசுவாச சத்தியங்களை நீ பலமாய்ப் பிடித்து நடந்தால், பரம பிதாவாகிய தேவனைப்பற்றிய மதிப்பும், இரட்சகராகிய இயேசுவின்மேல் அன்பும், பரிசுத்த ஆவியின்மேல் வாஞ்சையும் உனக்குள் பெருகி, நீ பரிசுத்தவான்களின் தொகையில் சேர்ந்தவனாகி, கிறிஸ்துவின் வருகைக்கு எதிர்பார்க்கிறவனாக இவ்வுலகத்தில் ஜீவித்து, பாவமன்னிப்படைந்தவனாய் மரணமடைந்து நித்திய ஜீவனாகிய மோட்ச வாழ்வை அடைவாய்.

## 3. கற்பனைகள்

(1) தேவனை விசுவாசிக்கிறவர்கள், அவர் தங்களுக்குப் பிதாவாக இருக்கிறதினிமித்தம், 'முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு மனதோடும் அவரில் அன்புகூரவேண்டும்' (மத். 22:37).

(2) தேவன் நம்மை நேசித்து அன்புகூருகிறதினிமித்தம் 'நாம் அவரவர், நம்மில் அன்புகூருவதுபோல பிறரிடத்திலும் அன்புவைக்கவேண்டும்' (மத். 22:39).

## 4. கீழ்ப்படிதல்

தேவனிலும் மனுஷனிலும் அன்புகூருகிறவர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்தும்படி அவர் பத்துக் கட்டளை

களைக் கொடுத்திருக்கிறார். 'ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுவான்' என்று இயேசுவும் அறிவித்திருக்கிறார். நாம் கீழ்ப்படிய வேண்டிய கட்டளைகளாவன:—

(1) உன் தேவனாகிய கர்த்தர் நானே; என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

(2) மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாவது, யாதொரு விக்கிரகத்தையாவது நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னை பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய பாவங்களை பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கம் செய்கிறவராயிருக்கிறேன்.

(3) உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

(4) ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும் உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களிலிருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளுக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ஆகையால், கர்த்தர் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

(5) உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக்கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

(6) கொலை செய்யாதிருப்பாயாக.

(7) விபசாரம் செய்யாதிருப்பாயாக.

(8) களவு செய்யாதிருப்பாயாக.

(9) பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

(10) பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்பதே.

இந்தக் கற்பனைகளை நாம் கைக்கொள்ள இயலாதவர்களாயிருக்கிறோம். ஆகையால் நாம் இந்தப் பிரமாணங்களை நினைவுகூரும்போதும், நமது காதினால் கேட்கும்போதும், 'கர்த்தாவே எனக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள என் இருதயத்தை ஏவியருளும்' என்று மன்றாட வேண்டியது.

இம்மட்டும் திருவிருந்தின் சம்பந்தமான பொதுப் போதனையையும், உபதேசத்தையும், கல்விக் குறிப்புகளையும் சுருக்கமாய்க் காட்டினேன். இனிமேல் உன்னிடத்தில் விளங்கவேண்டிய நற்குணங்களையும் நல்ல செய்கைகளையும் பற்றிப் பேசப்போகிறேன்; இந்த நற்குணங்களும் செய்கைகளும் உனக்கில்லாமல், நீ இந்தப் பரிசுத்த விருந்துக்கு வருகிறதுண்டானால் அது தேவனைப் பரியாசம் பண்ணுகிறதுபோலிருக்கும். அது ஆடுகளுக்கிடையில் ஒரு ஓநாய் உட்கார்ந்ததுபோலும், புறாக்களுக்கிடையில் ஒரு பூனை வந்ததுபோலும், இராஜவிருந்தாளிகள் மத்தியில் அழுக்கான தேகத்தோடும் அசுத்தமான வஸ்திரத்தோடும் ஒரு துஷ்டன் வந்து, எனக்கும் இந்த விருந்தில் பங்குண்டு என்று வாதாடுகிறது போலும் ஆகும். நீ இந்தத் திரு

விருந்தைச் சாப்பிட வரும்பொழுதெல்லாம் பரிசுத்த அலங்காரத்தோடு அவ்விருந்து மண்டபத்துக்குள் பிரவேசிக்கும்படி அவைகளை அடியில் குறிப்பிக்கிறேன்.

## நற்குணக் குறிப்புகள்

மூன்று மூலகுணங்கள்.

1. விசுவாசம்.
2. நம்பிக்கை.
3. அன்பு.

(1 கொரி. 13:13).

நாலு மூலலட்சணங்கள்.

1. நியாயம்.
2. விவேகம்.
3. இச்சையடக்கம்.
4. தைரியம்.

இவைகளுக்காக ஜெபம் செய்துவரவேண்டும்.

ஆவியின் ஏழு வரங்கள்.

1. ஞான வரம்.
2. விவேக வரம்.
3. ஆலோசனை வரம்.
4. ஆத்துமபெலன் வரம்.
5. அறிவு வரம்.
6. மெய்தேவபக்தி வரம்.
7. பரிசுத்தபயம் வரம்.

இந்த வரங்களுக்காக தினந்தோறும் ஜெபித்துவருவாயாக.

ஆவியின் கனிகள்.

1. அன்பு.
2. சந்தோஷம்.
3. சமாதானம்.
4. நீடிய பொறுமை.
5. தயவு.
6. நற்குணம்.
7. விசுவாசம்.
8. சாந்தம்.
9. இச்சையடக்கம்.

இந்தக் கனிகள் உன் ஆத்துமாவில் பழுக்கும்படி பார்த்துக்கொள்.

## நற்கிரியை குறிப்புகள்

இந்த நற்கிரியைகளில் சில ஆவிக்குரியதாயும், சில சரீரத்துக்குரியதாயும் சொல்லலாம்.

ஆவிக்குரியது.

1. அறிவீனனுக்குப் போதிப்பது.
2. குற்றவாளிகளை உணர்த்தல்.

சரீரத்துக்குரியது.

1. பசித்தவனைப் போஷித்தல்.
2. தாகம் தீர்த்தல்.

3. சந்தேகத்துக்கு ஆலோசனை சொல்லுதல்.
4. துன்பப்படுகிறவர்களை ஆறுதல் படுத்துதல்.
5. துன்பத்தைச் சகித்தல்.
6. மற்றவர்கள் பிழைகளை மன்னித்தல்.
7. மற்றவர்களுக்காகஜெபித்தல்.

3. வஸ்திரம் கொடுத்து உதவுதல்.
4. நோயாளியைச் சந்தித்தல்.
5. பரதேசிகளை உபசரித்தல்.
6. கைதிகளுக்குப் பணிவிடை செய்தல்.
7. மரித்தோரை அடக்கம் செய்தல்.

மேலே காட்டிய நற்குணங்களிலும், நற்கிரியைகளிலும் விருத்தியாகும்படி அவைகளில் தினந்தோறும் பழகவேண்டும். அப்படிப் பழகினால் வரவர இவையனைத்தும் பரிசுத்த ஆவியானவருடைய உதவியால் உன் இயல்பான குணங்கள் போலாகிவிடும். அப்பொழுது உன்னிலுள்ள கிறிஸ்துமார்க்கம் சிறப்பாய் விளங்குவதோடு, இயேசுவின்மேலும் பிறர் மேலுமுள்ள உன் அன்பின் வாசனை தெளிவாகத் தெரிய வரும்.

இந்தத் திருவிருந்துக்கு ஆசைப்படுகிறவன் களைந்துவிடவேண்டிய சில பாவங்களையும், அணிந்துகொள்ளவேண்டிய லட்சணங்களையும் காட்டுகிறோம்.

| களையவேண்டியது. | அணிந்துகொள்வது. |
|---|---|
| பெருமை. | தாழ்மை. |
| பொருளாசை. | பரோபகாரம். |
| இச்சை. | கற்பு. |
| பொறாமை. | பொறுமை. |
| பெருந்தீனி. | மட்டாய் புசித்தல். |
| கோபம். | சாந்தம். |
| சோம்பல். | சுறுசுறுப்பு. |

இன்னும் நீ பொதுவாக அறிந்துணர்ந்துகொள்ளவேண்டிய ஞானசாஸ்திரங்களின் சில குறிப்புகளைச் சொல்லுகிறேன்.

1. பிறர் பாவம்செய்ய ஆலோசனை சொல்லக்கூடாது.
2. பிறர் பாவம்செய்ய ஏவக்கூடாது.
3. பிறர் பாவம்செய்யச் சம்மதிக்கலாகாது.
4. பிறர் பாவத்துக்கு நியாயம் சொல்லக்கூடாது.
5. பிறர் பாவத்தைப் புகழக்கூடாது.
6. பிறர் பாவத்தை மறைக்கக்கூடாது.
7. பிறர் பாவத்தில் சம்பந்தப்படலாகாது.
8. பிறர் பாவத்தைப்பற்றி மவுனம் சாதிக்கக்கூடாது.
9. குற்றவாளிகளைப் பேணி ஆதரிக்கக்கூடாது.

இந்த ஒன்பது விதிகளில் ஒன்றையாவது, சிலவற்றையாவது நீ மீறுகிறதுண்டானால், மற்றவன் செய்கிற பாவத்தை நீயே செய்கிறதுபோலாகும். தானே பாவம் செய்கையில் பாவியின் தொகையும், பாவத்தின் தொகையும் ஒருபங்கானால் மற்றவனைப் பாவத்துக் குட்படுத்துவதில் அதின் தொகைகள் இரட்டிக்கும். மேலும் மற்றவனைப் பாவத்துக்குத் தூண்டுதல் அவன் ஆத்துமாவைக் கொலை செய்கிறதாகும்.

இன்னும் பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம் என்று சொல்லக்கூடிய எல்லாத் தீமைகளுக்கும் இடம் கொடாதபடி எச்சரிக்கையா யிருக்கவேண்டும்.

பரிசுத்தஆவிக்கு விரோதமான பாவங்களாவன.

1. தேவதயவை நினைத்து மதியாமல் பாவம்செய்வது.
2. எனக்கேது மன்னிப்பு என்று நிர்விசாரமாகி பாவத்தைச் செய்வது.
3. பாவம் என்று அறிந்தும் அதைச் செய்வது.
4. பிறர் வாழ்வைச் சகியாமல் பொறாமைகொள்வது.
5. பாவத்தில் பிடிவாதமாயிருப்பது.
6. மரணபரியந்தம் மனம் திரும்பாமலிருப்பது.

இப்படிப்பட்ட விஷயங்கள் உன் ஆத்தும வாழ்வைச் சமூலமாய் நஷ்டப்படுத்துமாதலால் இவைகளுக்கு இடங்கொடாதபடி எச்சரிக்கையா யிருக்கவேண்டும்.

# 3. தியான சோலை ஸ்நானம்

இதுவரையும் தியான சோலை விருந்தின் சம்பந்தமான அநேக போதனைகளைச் சொன்னேன். இப்பொழுது சோலைக்குள் பிரவேசிப்போமாக. அங்கே நீ செய்யவேண்டிய முதலாவது வேலை ஸ்நானம்தான். அதாவது உன் பாவ அழுக்குகளைப் பரிசோதனை செய்து, உன் பாவங்களை அறிக்கையிட்டு தேவன் உன்பேரில் கிருபையாயிருந்து விருந்துமண்டபத்துக்குள் வர உனக்கு இடங்கொடுத்து, தமது திருவிருந்தால் உன்னை மகிழ்ச்சியாக்கி, சந்தோஷத்தோடே அனுப்பும்படி முயற்சி செய்வதுதான்.

நீ முதலாவது உன் பாவ அழுக்குகளைப் பரிசோதனை செய்யவேண்டும். ஏனெனில் 'எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்' என்றும்; நம்முடைய 'பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறாரே; ஆதலால் பழைய புளித்த மாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்த மாவோடுமல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிப்போமாக' என்றும் பரிசுத்த வேதம் கற்பிக்கிறது (1 கொரி 11:29; 5:8). நீ உன் பாவ அழுக்குகளைப் பரிசோதனை செய்து அறிந்துகொள்ளும்படி தேவனுடைய கற்பனைகளைப்போல தெளிவான கண்ணாடி வேறொன்றில்லை. ஆதலால் அக்கற்பனைக் கண்ணாடிகளின் முன் நின்று முறையே உன் ஆத்துமாவின் அழுக்குகளைப் பரிசோதனை செய்வாயாக.

## தற்சோதனை

### வேதம்

'கர்த்தாவே, உமது பிரமாணங்களின் வழியை எனக்குப் போதியும்; முடிவுபரியந்தம் நான் அதைக் காத்துக்கொள்ளுவேன்.' உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும்; நான் அதில் பிரியமாயிருக்கிறேன். 'உமது அடியேனோ உமது பிரமாணங்களைத் தியானிக்கிறேன்.'

## ஜெபம்

பரமபிதாவாகிய தேவனே! உமது பரம விருந்தின் மேல் எவ்வளவு ஆசை எனக்குண்டென்பதை தேவரீர் அறிந்திருக்கிறீர். ஆனால் அந்த விருந்தில் பங்கு பெற வேண்டியவன் தன்னைத்தான் சோதித்து அறிந்து, அதன் பின் உமது பந்தியண்டை வரவேண்டுமென்றும் உமது வேதம் கற்பிக்கிறது. அக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவனாய், உமது பிரமாணங்களை என்முன்வைத்து என் ஆத்துமாவின் அழுக்குகளைப் பார்க்கப்போகிறேன். நீர் உமது ஆவியை எனக்குத் தந்து, நான் என்னை நன்றாய் அறிந்துகொள்ளும்படி உமது பிரமாணங்களால் என்னைப் பிரகாசிப்பித்தருளும். ஆமென்.

### 1. உன் தேவனாகிய கர்த்தர் நானே

தேவன் இல்லையென்று நான் நினைத்ததுண்டா?—தேவனிருப்பதை உணராமல் தாறுமாறாக ஜீவித்ததுண்டா?—பல தேவர்மேல் நாட்டம்கொண்டேனா?—தேவனைவிட வேறு ஆட்களை அல்லது பொருட்களை அதிகமாய் நேசித்ததுண்டா?—அவருடைய வேதத்தை அசட்டை செய்தேனா?—நான் என்னிஷ்டப்படி நடக்கிறேனா?—தேவ சித்தத்தை விரோதித்தேனா?—தேவ நடத்துதலையிட்டு முறுமுறுத்தேனா?—தேவன் இப்படி எனக்குச் செய்யவேண்டுமென்று நிபந்தனை பேசினேனா?—வீண்பக்திக்குச் சாய்ந்துவிட்டேனா?—என்னைப் பெரியவன் என்றெண்ணிக்கொண்டதுண்டா?—தேவமகிமையை நாடாமல் தற்புகழ்ச்சியில் பிரியப்பட்டேனா?

### 2. விக்கிரகங்களை வணங்காதே

நான் தேவனை சரியானபடி வணங்குகிறேனா?—தேவ ஆராதனைகளுக்குக் கிரமமாய் போகிறேனா?—தேவனை வணங்கும்போது என் ஆவியில் பணிதலுண்டா?—நான் ஆவியோடும் கருத்தோடும் ஆராதிக்கிறேனா?—தேவாலயத்தில் அசட்டையாயிருந்தேனா?—அங்கே சிரித்ததுண்டா?—பொருளாசையாகிய விக்கிரகாராதனை என்னிடத்தில்

உண்டா?—விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதைப் பிரியமாகப் புசித்தேனா?—விக்கிரகத்தைப் பற்றிப் பயந்தேனா?—கழிப்புக் கழித்தேனா?—பிசாசுகளுக்குப் பலியிட்டேனா?—பிசாசுகளுக்குப் பயப்பட்டேனா?—விக்கிரக பூசைகளுக்கு பணஉதவி செய்தேனா?—விக்கிரக பக்திக்காரரோடு சம்பந்தம் கலந்தேனா?

## 3. தேவநாமத்தை வீணிலே வழங்காதே

தேவநாமத்தால் ஆணையிட்டதுண்டா?—அந்த நாமத்தால் மற்றவர்களைச் சபித்ததுண்டா?—தேவநாமத்தை என் கோபத்திலாவது சந்தோஷத்திலாவது என் மன இஷ்டம் போல வழங்கினதுண்டா?—பொய்ச்சத்தியம் பண்ணினதுண்டா?—பண்ணின சத்தியத்தை மாற்றினேனா?—தேவனுடைய ஆலயத்தைப்பற்றியாவது, ஆராதனையைப்பற்றியாவது, அவருடைய ஊழியக்காரரைப்பற்றியாவது அசட்டையாய்ப் பேசினதுண்டா? — வேதவாக்கியங்களை விளையாட்டாக வழங்கினதுண்டா?—கடமைக்காக மாத்திரம் வேதத்தை வாசித்தேனா?—தேவன் என்ற சத்தம் எனக்குள் பரிசுத்த பயத்தையும், பாசத்தையும் தருகிறதா?

## 4. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரி

ஓய்வுநாளை மற்றநாளைப்போல மதிக்கிறேனா?—ஞாயிற்றுக்கிழமையில் என் சொந்த உலகவேலைகளைச் செய்துவருகிறேனா?—ஓய்வுநாளில் ஆராதனைக்குப் போகாமலிருந்தேனா?—பரிசுத்த இராப்போசனத்தை அசட்டை செய்தேனா?—அந்த நாளைசோம்பலில் கழித்தேனா?—வழக்குப் பேசிப் பின்னிட்டேனா?—அந்தநாளில் வீண்புஸ்தகங்களை வாசித்தேனா?—சமாசாரப் பத்திரிகைகளைப் படித்தேனா?—மற்றவர்களும் அந்த நாளை அசட்டை செய்ய ஏதுவாயிருந்தேனா?—அதை விருந்துநாளாக்கினேனா?—சரியான முகாந்தரமின்றி பிரயாணம் செய்தேனா?

## 5. உன் தாயையும் தகப்பனையும் கனம்பண்ணுவாயாக

என் பெற்றோரை கனம்செய்கிறேனா?—அவர்கள் விருத்தாப்பியகாலத்தில் போஷித்து வஸ்திரம் கொடுக்கிறேனா?—

தகப்பனையாவது, தாயையாவது ஏசி அடித்ததுண்டா?—பெற்றோருக்குக் கீழ்ப்படியாமலிருந்தேனா?—என் பெற்றோரை வஞ்சித்தேனா?—அவர்கள் மனம்நோக நடந்ததுண்டா?—பெற்றோர் சொத்தை அழித்தேனா?—நான் என் பெற்றோருக்குப் பாரமாயிருக்கிறேனா?—அவர்களுக்காக ஜெபம் செய்துவருகிறேனா?

என் ஆத்தும மேய்ப்பரை மதிக்கிறேனா?—என் குருவை அவமதித்ததுண்டா?—குருவின் போதனையை அல்லத்தட்டினதுண்டா?—குருவின் சவரட்சணைக்கு என்னாலான உதவிசெய்து வருகிறேனா?—உபாத்தியாயருக்கு அடங்கி நடக்கிறேனா?—சபை ஒழுங்குகளை மீறி நடக்கிறேனா?—தேச சட்டத்துக்கு அடங்கி நடக்கிறேனா?—முதியோரைக் கனம்பண்ணுகிறேனா?—மூத்தோருக்குத் தாழ்மையும் மரியாதையுமாய் நடக்கிறேனா?—என் எஜமானைக் கனப்படுத்தி வருகிறேனா?—நான் என் எஜமானை அவமரியாதை செய்ததுண்டா?—எஜமானுடைய பொருளைச் சேதப்படுத்தினதுண்டா?—என் எஜமானை ஏமாற்றினதுண்டா?

## 6. கொலை செய்யாதிருப்பாயாக

முகாந்தரமின்றி கோபமடைகிறேனா?—பிதஷ்டம், ஆத்திரம், படபடப்பு ஆகிய இவை என் பேச்சிலாவது செய்கையிலாவது உண்டா?—எரிச்சலால் மற்றவர்களை அடித்ததுண்டா? — சபித்ததுண்டா? — திட்டினதுண்டா? — மண் வாரி எறிந்ததுண்டா?—பல்லைக் கடித்ததுண்டா?—வர்மம் கூறினதுண்டா?—வாது பேசினதுண்டா?—எரிச்சலால் என் மரணத்தை விரும்பினதுண்டா?—மற்றவன் சாவை விரும்பினதுண்டா?—வர்மத்தையும் பகையையும் மனதில் பேணி வைத்ததுண்டா?—மன்னிப்புக் கேட்டாலும் மன்னிக்க மாட்டேன் என்று சாதித்ததுண்டா?—சமாதானமாக விரும்பாமலிருந்தேனா?—தன் வாழ்வை நாடி பிறர் சாவை விரும்பினேனா?—மற்றவர்களைப்பற்றி தீது பேசினேனா?—அவர்கள் பேரைக் கெடுத்தேனா?—நான் சண்டை மூட்டிவிட்டேனா?—சண்டை போட்டேனா?—பழிவாங்கும் சுபாவம் எனக்குண்டா?—மற்றவர்களை அவமதித்தேனா?—பழித்

தேனோ?—என்னால் ஒரு ஆத்துமா கெட்டுப்போனதுண்டா?—யாரையாவது பாவத்தில் விழச்செய்தேனோ?

## 7. விபசாரம் செய்யாதிருப்பாயாக

என் சரீரமானது பரிசுத்தஆவியின் ஆலயம் என்று நினைத்தேனோ?—இச்சையில் என் மனதை வளர்த்தேனோ?—கெட்ட சம்பாஷணை செய்தேனோ?—சிற்றின்பப்பாடல் படித்தேனோ?—அல்லது கேட்டேனோ?—சிற்றின்பப் புஸ்தகங்களை வாசித்தேனோ?—சிற்றின்பத்துக் கேதுவான படங்களில் பிரியப்பட்டேனோ?—கற்புக்கேதுவாக என் கண்காட்சியை நடத்தினேனோ?—மாம்ச இச்சைக்கேதுவாக உடுத்தினேனோ?—என் உடலை வாசனை ஏற்றினேனோ?—சரசப்பேச்சு என்னிடத்திலுண்டா?—மாம்ச சிந்தைக்கேற்ற சாடைப்பேச்சுப் பேசினேனோ?—சிற்றின்ப சம்பந்தமான கூட்டங்களுக்குப் போனேனோ?—கூத்து, நாடகம் இவைகளுக்குப் போனேனோ?—குடிவெறியாவது, பெருந்தீனியாவது என்னிடத்தில் உண்டா?—நான் சோம்பலுக்கு இடம் கொடுக்கிறதால் மாம்ச இச்சை வல்லமை கொள்ளும்படி செய்கிறேனோ?

## 8. களவு செய்யாதிருப்பாயாக

என்னுடையதல்லாத ஒரு சிறிய பொருளையாவது நான் எடுத்துக்கொண்டதுண்டா?—களவுபொருளை நான் வாங்கினதுண்டா?—மோசமான நடபடிக்கையில் சம்பந்தப்பட்டதுண்டா?—ஒரு பொருளை வாங்க அதின் சரியான விலையை குறைத்துச் சொன்னதுண்டா?—எதையாவது அதிக விலைக்கு விற்றதுண்டா?—கள்ளப்படியாவது நிறைகல்லாவது வழங்கினதுண்டா?—கள்ள நாணயத்தை நல்ல நாணயம் போல காட்டி மாற்றினதுண்டா?—நியாயமான வரிகளைச் செலுத்தாமல் மோசம் செய்ததுண்டா?—வருமானத்துக்கு மிஞ்சி செலவிட்டதுண்டா?—கடன்பட்டதுண்டா?—பட்ட கடனைச் செலுத்தாமலிருந்ததுண்டா?—வழியில் கண்டெடுத்தபொருளைவிசாரித்துக் கொடுத்து விட்டதுண்டா?—என் வசம் ஒப்புவிக்கப்பட்ட பொருளை வீண்செலவு செய்ததுண்டா?—மற்றவர்கள் பொருளை வேணுமென்று நஷ்டப்

படுத்தினதுண்டா?—உற்சாகமாக தர்மம் செய்தேனா?—நான் ஒப்புக்கொண்ட வேலையை நஷ்டப்படுத்தினேனா?—மற்றவர்களுடைய இரகசியங்களைத் திருடப் பிரயாசப்பட்டேனா?—எனக்கு இருந்தும், இல்லாதவன்போல பேசி மற்றவர்களிடத்தில் உபகாரம் பெற்றுக்கொண்டதுண்டா?

## 9. பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக

நான் பொய் சொன்னேனா?—சத்தியத்தை மறைத்தேனா?—உள்ளதைக் கூட்டி அல்லது குறைத்துச் சொன்னேனா?—இரகசியம் என்று சொல்லி வைக்கப்பட்டதை வெளியிட்டேனோ?—மாறுபாடாக நடந்தேனா?—வஞ்சனையான பேச்சு உண்டா?—பொய்யான போக்குகளைச் சொல்லி என் குற்றத்தை மூடிக்கொண்டேனா?—இல்லாத காரியத்தை ஒருவன்பேரில் சொன்னேனா?—ஒருவன் கூட இருக்கும்போது சொல்லக்கூடாததை அவனில்லாதபோது சொன்னேனா?—மற்றவர்கள் மேல் வீணாகச் சந்தேகப்பட்டேனா?

## 10. பிறர்பொருளை இச்சியாதிருப்பாயாக

தேவன் எனக்குக் கொடாத வாழ்வை விரும்பினேனா?—எனக்குள்ளது போதாதென்று மொறுமொறுத்தேனா?—மற்றவர்கள் வீட்டையாவது, நிலத்தையாவது, அந்தஸ்தையாவது, உத்தியோகத்தையாவது, மனைவியையாவது இச்சித்தேனா?—மற்றவர்கள் நஷ்டத்தைக் கேட்டுச் சந்தோஷப்பட்டேனா?—பிறர் நஷ்டம் என் வாழ்வு என்று நினைத்தேனா?—மற்றவர்கள் வேலையாளை இச்சித்து எனக்கு வேலையாளாக்கினதுண்டா?

# பாவப் பரிசோதனை

## பெருமை

என்னைப்பற்றி உயர்வாக நினைத்துக்கொள்ளுகிறேனா?—நான்தான் என்கிற ஆணவமுண்டா?—என் வேலையையும் என் பேச்சையும் புகழ்ந்து கொள்ளுகிறேனா?—என் உடை, நடை, அழகு, பேச்சு இவைகளைப்பற்றி கர்வம்கொள்ளு

கிறேனா?—எனக்கில்லாத வரம் உண்டென்று காட்டுகிறேனா? —என் கருத்தை உயர்ந்ததென்று சொல்லுகிறேனா?—என் கருத்து பிசகென்று மனதில் அறிந்தும் அது சரியென்று சாதிக்கிறேனா?—ஏதாவது விஷயத்தில் என் பேர் புகழ்ச்சி யாய் வராவிட்டால் எரிச்சலடைகிறேனா?—பேர் பிரஸ்தா பத்துக்கு நாடி உபாயதந்திரம் செய்கிறேனா?—என்னாலாகாத காரியத்தை, நானுச்சுது என்று சாமர்த்தியம் பேசின துண்டா?—என்னிஷ்டப்படிச் செய்ய நாடினேனா?—மற்ற வர்கள் புகழப்பட்டபோது எனக்கு விசனம் வந்ததா?— மற்றவர்களை பழிப்பாய்ப் பேசினதுண்டா?—மற்றவர் களுக்கு இணங்காத குணமுண்டா?—தாழ்த்தப்பட்டால் சகித்துக்கொண்டேனா?—என் குற்றத்தைத் துணிந்து மறுத் தேனா?—பேர் விளங்கட்டும் என்று எந்தக்காரியத்தையாவது செய்தேனா?—நான் அதிகாரப் பிரியனா?—எதற்கும் முன் னுக்கு நிற்கிறேனா?—எனக்கு அநேக நல்லகுணமுண்டு என்று பெருமையாக நினைத்துக்கொண்டேனா?

## பொருளாசை

தேவன் எனக்குக் கொடாத வாழ்வு வேண்டுமென்று விரும்பினேனா?—கள்ளத்தனமாக ஏதாவது பொருளைச் சம்பாதித்தேனா?—மற்றவனுடைய எந்தப் பொருளையும் எனக்குவேண்டுமென்று ஆசைப்பட்டேனா?—பிறர்சொத்தை அபகரிக்க முயற்சித்ததுண்டா?—பணத்தின்மேல் பணம் சேர்க்க விரும்பினேனா?—பணமே என் தெய்வம்போலிருக் கிறதா?—பண ஆவலால் மற்றவன் சாவை நாடினேனா?— சூதாடிப் பணம் சம்பாதித்ததுண்டா?—தர்மம் கொடாமலும் காணிக்கை செலுத்தாமலும் பணத்தை நான் கூட்டினேனா? —கூலிக்காரருடைய கூலியைக் குறைத்து, என் ஆஸ்தியைப் பெருக்கினேனா?—கள்ளப் படியாலும், கள்ள நிறைகல்லா லும் எனக்குப் பணம் சேர்ந்ததோ?

## இச்சை

என் சரீரமானது பரிசுத்த ஆவி தங்குகிற ஆலயமா யிருக்கிறதென்று நினைத்தேனா?—மாம்ச இச்சையை யோசித்

தேனோ?—இச்சை விருத்தியாகப் பிரயத்தனங்கள் செய்தேனோ?—மாம்ச இச்சைக்கு உதவியாக என் கண்ணை, அல்லது கையை அல்லது பேச்சைப் பிரயோகித்தேனோ?—கெட்ட எண்ணமுண்டாகத்தக்க புஸ்தகங்களை வாசித்தேனோ?—பாட்டுகள் படித்தேனோ?—படங்கள் அல்லது பொம்மைகளை பார்த்தேனோ, செய்தேனோ?—மற்றவர்களைச் சிற்றின்பத்துக்கு எழுப்பிவிட்டேனோ?—நான் அடக்கமும், மரியாதையுமாய் நடந்து கொண்டேனோ?—மாம்ச சிந்தைக்கேதுவாக மற்றவர்களுடன் மிதமிஞ்சி சகவாசம் செய்கிறேனோ?

## பொறாமை

மற்றவர்கள் என்னைவிட அழகில் அல்லது ஐசுவரியத்தில் அல்லது ஆவிக்குரிய வரங்களில் அதிகப்பட்டிருக்கிறதினிமித்தம் பொறாமை யடைந்தேனோ?—மற்றவர்கள் என்னைவிட சமர்த்தரும், பலவான்களும், சுகதேகிகளுமாயிருக்கிறதை யிட்டு எரிச்சலடைந்தேனோ?—மற்றவர்களைப் பற்றிப் புறங் கூறி, பழித்து, குறைகூறுகிறேனோ?—என் வார்த்தையாலாவது, செய்கையாலாவது, நினைவாலாவது மற்றவர்களை நஷ்டப்படுத்தினேனோ?—மற்றவன் உத்தியோகம் அல்லது சம்பளம் உயர்ந்தபோது மனவருத்தப்பட்டேனோ?—மற்றவர்களைப் புகழ்ந்து பேசுவது என் காதுக்கு வருத்தமாயிருந்ததா?—பிறர் நஷ்டப்பட்டபோது மகிழ்ச்சியடைந்தேனோ?—மற்றவர்களுடைய குற்றங்களைப் பற்றி பெரும் பேச்சும், விசாரணையும் நடக்கட்டும் என்று நினைக்கிறேனோ?—பிறர் பேசின வார்த்தைகளை தப்பாக அர்த்தம் பண்ணி அதை வெளியிடுகிறேனோ? — பொறாமையினாலே மற்றவர்களைப் பற்றிய நன்மையான சங்கதிகளை மறைத்து வைத்துக் கொள்ளுகிறேனோ?—பொறாமையினாலே மற்றவனை நஷ்டப் படுத்தி லாபம் பெற்றுக்கொண்டேனோ?

## பெருந்தீனி

நான் அளவுக்கு மிஞ்சி சாப்பிட்டேனோ?—நான் மதுபானப்பிரியனோ?—எப்போதும் நல்ல போஜனம் வேண்டுமென்று விரும்புகிறேனோ?—போஜன விஷயத்தில் அதிகப் பணம் செலவிட்டேனோ? — பேராசையால் திருடித்

தின்றேனா?—மற்றவர்களிடத்தில் அது, இதுவேண்டுமென்று கேட்டேனா?—போஜனப் பேச்சை அடிக்கடி பேசினேனா?—சம்பிரமமாய் சாப்பிட்டுக் காலங்கழிக்கிறேனா?—அளவாகப் புசிக்க ஆசைப்படுகிறேனா?—வேளாவேளை உபவாசம் செய்கிறேனா?

## கோபம்

நான் முற்கோபியா?—கோபத்தால் யாரையாவது அடித்தேனா?—ஏதாவது பொருட்களை உடைத்தேனா?—ஏசிப் பேசினேனா?—முகாந்தரமின்றி கோபமடைந்தேனா?—காரணமின்றி ஒருவனை அருவருத்தேனா?—சண்டை பிடித்தேனா?—கோபத்தால் மற்றவனோடு பேசாமலிருந்தேனா?—மற்றவனோடு எரிச்சலாகி நற்கருணையில் சேராமலிருந்தேனா?—என் கையின்கீழ் உள்ளவர்களை மிதமிஞ்சிக் கண்டிப்பாகப் பேசி நடத்தினதுண்டா?—அற்பக் காரியத்தையிட்டுப் பதஷ்டமும், பெருஞ்சத்தமும்போட்டதுண்டா?—துன்பம், துக்கம், தரித்திரம் நேரிட்டபோது எரிச்சலும் கோபமும் காட்டினேனா?

## சோம்பல்

என் வேலையை அசதியாய்ச் செய்தேனா?—அரைகுறையாகச் செய்தேனா?—சோம்பலாய் வேலையை முடிக்க நாள் கடத்தினேனா?—பிந்தி எழுந்து ஜெபம் பண்ண நேரமில்லாதபடி வேலைக்குப் போனேனா?—என்னால் கூடியபொழுதெல்லாம் பரி. இராப்போஜனத்தில் சேர்ந்தேனா?—தகுந்த ஆயத்தத்தோடு இராப்போஜனம் வாங்கினேனா?—என் பாவங்களை அடிக்கடி பரிசோதனை பண்ணிவருகிறேனா?—சோம்பலால் தனி ஜெபத்தை விட்டேனா?—தியானம் பண்ணாமலிருந்தேனா?—மற்றவர்களுக்காக ஜெபிப்பதை நிறுத்தினேனா?—அற்பப் பாவங்களுக்கு இடம்கொடுத்தேனா?—சோம்பலால் வேலை செய்வதை நிறுத்தி, பாவம் செய்துவரும்படி பண்ணிக்கொண்டேனா?—நான் கஷ்டப்படாமல் மற்றவர்கள் கஷ்டப்பட்டுச்சம்பாதித்ததில் பிழைக்க ஆசைப்படுகிறேனா?—என்னுடைய சோம்பலால் என்னால் ஆதரவு பெற்றுப் பிழைக்க வேண்டியவர்கள் பசியாயிருக்கிறார்களா?

இந்தக் கேள்விகளால் அல்லது இதுபோலொத்த தற்சோதனையால் உன் இருதயத்திலுள்ள பாவங்களைப் பரிசோதித்து, உன் பாவங்களை ஒரு குறிப்பில் எழுதி அல்லது ஞாபகத்தால் அறிக்கையிட்டு பச்சாத்தாப மடையவேண்டியது.

இச்சமயத்தில், பரிசுத்தமும் மகத்துவமுமுள்ள தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தேனே!—அன்பும் இரக்கமுமுள்ள பிதாவை என் பாவத்தால் வருத்தப்படுத்திவிட்டேனே!—எனக்காகத் தமது குமாரனைத் தந்தாரே,—என்னைத் தமது பிள்ளையாக்கினாரே,—எனக்கு மோட்சத்தையும் தரப் பிரியமாயிருக்கிறாரே,—இப்படிப்பட்ட நேசமுள்ள பிதாவை கனவீனப்படுத்திவிட்டேனே என்று உணர்ந்துகொண்டு, ஜெபம் செய்.

## ஜெபம்

அளவில்லாத தயவுநிறைந்த பிதாவே, கிருபா சமுத்திரமே! உமக்கு விரோதமாகப் பாவம் செய்தேன் என்றுணர்ந்து மனஸ்தாபப்படுகிறேன். இதோ உமது பாதத்தில் விழுகிறேன்; பாவ மன்னிப்புக்கேற்ற மெய்யான மனஸ்தாபத்தை எனக்குத் தாரும்; நீர் அங்கிகரிக்கத்தக்க நொறுங்குண்ட இருதயத்தை எனக்குக் கட்டளையிட்டு, உமது திருக்குமாரன் நிமித்தம் எனக்குப் பாவமன்னிப்பின் ஆசீர்வாதங்களை அருளியருளும். ஆமென்.

## ஜெபம்

என் நேச இரட்சகா! சிலுவையில் காயப்பட்டு இரத்த சோரையாகி, களைத்துத் தொங்குகிறவண்ணமாக என் இருதயம் உம்மை நோக்குகிறது. உமது சரீரமெங்கும் இரத்தம் ஓடுகிறதைப் பார்க்கிறேன். இது என் பாவம் செய்த வேலைதான். உம்முடைய காயங்களில் என் பாவங்களின் பருமனைக் காண்கிறேன். உம்முடைய வேதனைகள் துக்கங்கள் எல்லாவற்றையும் நான் சரியானபடி உணர்ந்து என் பாவங்களைப் பகைக்கிறேன்.

ஆ நேசமே! உன்னத நேசமே! நான நசன, நசன, நசன! ஆமென்.

## ஞான உணர்ச்சி

ஐயோ, தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படாமல் மரித்த எத்தனையோ ஆத்துமாக்கள் இப்போது நரகவேதனையை அனுபவிக்கிறது! அநேக ஆத்துமாக்கள் என்னைவிடக் குறைந்த தொகையுள்ள பாவங்களைச் செய்தாலும் மனந் திரும்பாமல் மரித்ததால் நித்திய துக்கத்தை அடைந்து வாதைப்படுகிறதே! இவ்வளவு பெரிய பாவியாகிய என்னை இதுவரையும் உயிரோடு வைத்திருப்பது என் பிதாவின் தயவல்லவா? நான் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பியல்லவோ தேவன் என்மேல் இவ்வளவு விசேஷ தயவு பாராட்டியிருக்கிறார்!

நான் பாவம் செய்யுமுன் மோட்சம் என் வீடாகவும், சுதந்தரமாகவும், என் சொந்த நாடாகவுமிருந்தது; பாவம் செய்த நேர முதல், ஐயோ என் வாழ்வையெல்லாம் இழந்தேன்! பாவபாசத்தால் இயேசுவின்மேலுள்ள பாசம் அழிந்துபோயிற்று! தூதர் துணையையும் இழந்தேன்! பிதாவே உமக்கு விரோதமாக நான் பாவம் செய்யவில்லையானால், அல்லது பாவத்தை ஜெயித்து விட்டேனானால் எவ்வளவு பாக்கியவானாயிருப்பேன்! இதோ நொறுங்குண்டு, துக்கம் பூண்டு, வெட்கம் போர்த்து உமது பாதத்தில் விழுகிறேன். உமது பாதத்தால் என்னை உதைத்தாலும் சரி உமது பாசத்தால் எனக்கு மன்னித்தாலும் சரி, நீர் மன்னிக்கக் கிருபை மிகுந்தவர். நீர் சாகிறவனுடைய சாவை விரும்பாதவர்; நான் மனம் திரும்பிப் பிழைப்பதை அதிகமாய் விரும்புகிறீர்.

இதோ நான் மனம் திரும்புகிறேன்!
நீர் என் மனதைத் திருப்பியருளும்!
என் பாவங்களைப் பகைக்கிறேன்,
தேவா, பாவியாகிய என்னைப் பகையாதேயும்!

## கீத உணர்ச்சி

1. 'தேவனே; நான் எத்தனை பாவ பாதகங்களை
செய்து வந்தேன் என்பதை
உணர்த்தும், என் கர்த்தரே.'

2. 'ஐயோ நான் மா பாவத்தால்
கெட்டுப்போயிருக்கையால்
என்றும் வாடி நோகிறேன்
துக்கத்தால் கலங்கிறேன்.'

3. 'நெஞ்சு என்னைக்குத்தவே
துன்பம் துயர் மிஞ்சவே
ஆவியும் கலங்கிற்று
கண்ணீர்ப்பாய்ச்சலாயிற்று.'

4. 'வெட்கம் கொண்ட அடியேன்
துக்க முள்ளோனாய் வந்தேன்
சுவாமி என்னை மிகவும்
தேற்றி மன்னித்தருளும்.'

# 4. விண்ணப்பக் கொத்து

1. பிதாவே, நான் பழைய கெட்ட குமாரனுடைய சகோதரன்; தகப்பனே உமக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்; இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல.

2. காணாமற்போன ஆட்டைப்போல வழிதப்பினேன்; உமதடியானைத் தேடும்; நான் உமது கற்பனைகளை மறந்து போகவில்லை.

3. ஆண்டவரே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும்; உமது கிருபையினிமித்தம் என்னை ஆதரித்தருளும்.

4. கர்த்தாவே, என்னைச் சோதித்து, என் இருதயத்தை ஆராய்ந்தருளும். என்னைப் பாவ வழியிலிருந்து விலக்கி பரிசுத்த வழியிலே நடத்தியருளும்.

5. பிதாவே, எப்பொழுதும் இரக்கமாயிருக்கிறது உமக்கு லட்சணம், பாவங்களை மன்னிக்கிறது உமக்கே உரியது. என்னைத் தயவால் சந்தித்து, அன்பால் அணைத்து என் பாவங்களெல்லாவற்றையும் மன்னித்தருளும்.

6. இயேசுவே, ஆத்தும வைத்தியரே, ஜீவாதிபதியே, உம்மிடத்தில் என் பாவங்களை அறிக்கையிடுகிறேன்.

என்னைக் குணமாக்கும் கர்த்தாவே; என் எலும்புகள் நடுங்குகிறது. என் ஆத்துமாவின் நோயைக் குணமாக்கும். இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமுமுள்ள தயாநிதியே, என் பாவங்களை மன்னியும்; என் இரட்சகராகிய இயேசுவே, மன்னியும்.

7. பரிசுத்த ஆவியே, நீர் எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிறீர்; உம்மால் எங்கள் ஆவி ஜீவனையும் பெலனையும் அடைகிறது. என் விண்ணப்பத்தைக் கேட்டு, என் வேண்டுதலை ஏற்றுக்கொண்டு எனக்குச் சந்தோஷமும் சமாதானமுமான உத்தரவை அருளிச்செய்யும்.

8. ஒரு பாவியும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனம் திரும்பிப் பிழைப்பதையே விரும்பிகிற பரம தகப்பனே, நான் உமது கோபத்தால் அழிந்து உமது உக்கிரத்தால் சிதைந்து போகாதபடி, எனக்கு மெய் மனஸ்தாபத்தையும், மெய்யான மனம் திரும்புதலையும் கட்டளையிட்டருளும்.

9. ஐயோ நான் என் பாவத்தால் எவ்வளவு நிர்ப்பாக்கியனாகி விட்டேன்! தயவுள்ள தகப்பனே, என்பேரில் பரிதாபமாகி, இயேசுவினிமித்தம் என் குற்றங்களை மன்னியும்.

10. கர்த்தாவே, உமது கண்களுக்கு என் அந்தரங்க பாவங்களெல்லாம் தெரிந்திருக்கிறது. பிரதான பாவியாகிய என்மேல் திரளான உமது தயவு தங்குவதாக. இல்லாவிட்டால் நான் அழிந்துபோவேன்.

11. பிதாவே, என்னிலுள்ள எல்லாப் பாவங்களையும் நீர் அறிந்திருக்கிறீர். என் பாவங்கள் அநேகத்தை நான் மறந்துபோனேன்; தேவரீர் மறக்கவில்லை. என் மத்தியஸ்தரும் மீட்பருமான இயேசுவே எனக்கும் என் பிதாவுக்கும் இடையில் வந்து, நான் அழிந்துபோகாதபடி எனக்காக வழக்காடி, மன்றாடி என்மேல் பாவமன்னிப்பைக் கூறும்.

# 5. பாவ மன்னிப்பு வாசகங்கள்

வேதம்

1. 'உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும், அவைகள் இரத்தாம் பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்' (ஏசா. 1:18).

தியானம்

இரட்சகா! நான் ஒரு இரத்தாம்பரப் பாவியாயிருக்கிறேன்; நான் ஜன்ம பாவமும் கருமப் பாவமுமாகிய இரட்டைச் சாயமேறின பாவி ஐயா! உமது இரத்தத்தால் என்னைக் கழுவியருளும். பஞ்சமாபாதகனாகிய என்னை உமது இரத்தத்தால் பஞ்சுபோல வெண்மையாக்கியருளும்.

வேதம்

2. 'உன் பாவங்களினால் என்னைச் சங்கடப்படுத்தி, உன் அக்கிரமங்களினால் என்னை வருத்தப்படுத்தினாய். நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே கொலைத்துப்போடுகிறேன். உன் பாவங்களை நினையாமலுமிருப்பேன் (ஏசா. 43:24,25).

தியானம்

நான் உமக்குண்டாக்கின எல்லாச் சங்கடங்களையும் மன்னியும், பிதாவே! உமக்குச் செய்த வருத்தங்களையெல்லாம் பொறுத்துக்கொள்ளுமையா! என்னிமித்தம் எனக்கு மன்னிப்பே இல்லை. உமது நிமித்தமே எனக்கு மன்னிப்புண்டு. என்னால் எனக்கு லாபமொன்றுமில்லை; உம்மால் மாத்திரம் எனக்கு லாபமுண்டு. நான் குணப்படும் மட்டும் என் பாவம் உமது முகத்துக்கு முன் ஈய எழுத்தால் எழுதப்பட்டிருந்தது. குணப்பட்டபோது அதை உமது குமாரனுடைய இரத்தத்தால் கழுவி அழித்துக் குலைத்துப் போடுகிறீர்.

'உன் பாவங்களை நினையாமலுமிருப்பேன்' என்று சொல்வது எவ்வளவு தயாளம். அதற்காக உமக்கு ஸ்தோத்திரம்! ஆனால் நான் அவைகளை தினந்தோறும் நினைவு கூர்ந்து வரும்படி என் இருதயத்திலே அவைகளை எழுதியருளும்.

## வேதம்

3. 'உன் மீறுதல்களை மேகத்தைப்போலவும், உன் பாவங்களை கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன். என்னிடத்தில் திரும்பு, நான் உன்னை மீட்டுக்கொண்டேன்; பயப்படாதே உன்னை மீட்டுக்கொண்டேன்; நீ என்னுடையவன்' (ஏசா. 44:22; 43:1).

## தியானம்

வெண்மேகங்களும், கார்மேகங்களும் காற்றினால் அடிபட்டு அகன்றுபோகிறதை நான் காணும்போதெல்லாம் இந்த தயவான வாக்குத்தத்தத்தை நான் நினைவுகூர்ந்து உம்மை ஸ்தோத்திரிப்பேனாக. என்னை மீட்டுக்கொண்ட இயேசுவே, உம்மிடத்தில் என்னைத் திருப்பியருளும், அப்பொழுது நான் திரும்புவேன். 'நீ என்னுடையவன்' என்று நீர் சொந்தம் பாராட்டிப் பேச எனக்குக் கிடைத்த சலாக்கியமே போதும். இன்றுமுதல்,

நீர் என்னுடையவர்
நான் உம்முடையவன்
என்னை மீட்டுக்கொண்டீர்.

## வேதம்

4. 'மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது.' 'பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்' (மாற். 2:5,10).

## தியானம்

நீர் என் பாவங்களை மன்னிக்குமுன்னே என்னை மகன் என்று அழைக்கிறது எவ்வளவு தயாளம். பாவமன்னிப்பை நாடும் பாவி இயேசுவுக்கு மகனாம்! அல்லேலூயா! இந்த

இனமுறைடை நான் இழந்துபோகாதபடி பாதுகாத்துக் கொள்வேனுக. பாவமன்னிப்பின் அதிகாரத்தோடு, ஏழு குத்து விளக்குகளின் மத்தியிலே நிலையங்கி தரித்து பொற் கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக் கொப்பானவராய் விளங்கின தேவகுமாரனே, இதோ பாவபாரத்தால் இளைத்து நொந்துபோய் உமது கிருபாசனத்தண்டை சாஷ்டாங்க மாய்க் கிடக்கும் அடியேன்மேல் பாவவிமோசன வாசகம் கூறுவீராக!!

இயேசு: 'மகனே, உன் பாவங்கள்
உனக்கு மன்னிக்கப்பட்டது.'

பாவி: ஆமென்.

## வேதம்

5. 'நான் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ; இனிப் பாவம் செய்யாதே' (யோவா. 8:11).

## தியானம்

ஆக்கினைக்குள்ளான என்னை ஆக்கினை செய்ய அதிகார முடைய இயேசு, 'நான் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை' என்று சொன்னால் அப்பால் என்மேல் ஆக்கினைத் தீர்ப்புக் கூற ஒருவருமில்லை. பரிசுத்தமுள்ள தேவனும் என்மேல் தமது ஆக்கினையைக் கூறமாட்டார். தேவன் என் பாவத்தினிமித்தம் ஆக்கினை செலுத்தும்படி என்னைப் பின்தொடர்ந்து வந்தால், என் இயேசு எனக்கும் தேவனுக்கும் மத்தியில் குறுக்கிட்டு, அவன் ஆக்கினை யனைத்தையும் நான் சகித்தாச்சுது, நீர் அவனைத் தொடரு வானேன்? அவன் என்னுடையவன்; நான் அவனை மீட்டுக் கொண்டேன் என்று பிதாவைத் தடுத்து என்னைத் தமது இரட்சிப்பின் செட்டைகளால் மூடுவார்.

அவர் தாமும் என்னை ஆக்கினைக்குட்படுத்தமாட்டார். ஏனெனில் அவரே என் இரட்சகரென்று விசுவாசிக்கிறேன். விசுவாசியாதவனே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

எனக்காக ஆக்கினையடைந்து, என் ஆக்கினைகளை மாற்றின நேச இயேசு, 'நீ போ; இனிப் பாவம் செய்யாதே'

என்று எச்சரிக்கிறார். இந்த எச்சரிப்பானது, நான் ஆக்கினைக்குத் தப்பினாலும், இன்னும் பயபக்தியோடு ஜீவிக்க வேண்டியவனாயிருக்கிறேன் என்பதை எனக்கு உணர்த்துகிறது.

இவ்வளவு அன்புள்ள சிநேகிதனை எந்தக் கண்டத்திலாவது, தேசத்திலாவது, நாட்டிலாவது, நகரத்திலாவது, பட்டியிலாவது, பாதையிலாவது நான் கண்டதேயில்லை. நான் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்ட குற்றவாளியானாலும், அவரை விசுவாசித்து நேசிக்கிறது மெய்யானால் அவர் என் பாவங்களை மன்னித்துவிடுகிறார்.

சிநேகிதனே நீ திருவிருந்து மண்டபத்தில் உட்காருமுன் உன் ஆவியைச் சுத்திகரித்துக்கொள்ளும்படி முதலாவது உன் பாவங்களைப் பரிசோதனை செய்யவும், அவைகளின் தன்மையை நீ உணர்ந்து விண்ணப்பம் செய்யவும் அப்பால் தேவன் பாவமன்னிப்பைக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார் என்று பல வேதவாக்கியங்களால் அறிந்துகொள்ளவும் செய்தோம். இப்போது நீ பச்சாதாபத்தால் நிறைந்தவனாய் உன் சுயநீதி, சுயநலம், சுயபக்தி ஆகிய அழுக்கு வஸ்திரங்களைக் களைந்துவிட்டு, உன்னுடைய பாவ நிருவாணத்தை உணர்ந்தவனாய் உன்னைத் தாழ்த்தி பாவ அறிக்கை ஆகிய உப்பு ஜலத்தை சற்று குடித்து, சவக்கடலில் சற்றுநேரம் ஸ்நானம் செய்வாயாக.

# 6. பாவ உணர்வு

## உப்புஜல பானம்

1. நீ செய்த பாவங்கள் இன்னதென்றும், இன்ன இடத்தில் செய்தாயென்றும் ஞாபகம்பண்ணு.

2. நீ செய்த பாவம் பரிசுத்தமும், நீதியுமுள்ள தேவனுக்கு விரோதமானதென்றும், அவர் உன்னைத் தமது கோபத்தால் பட்சிப்பது நியாயம் என்றும் உணர்ந்துகொள்.

3. நீ செய்த பாவம் அன்பும் தயவும், இரக்கமும் கிருபையுமுள்ள உன் பரம பிதாவைக் கனவீனப்படுத்தி விட்டதென்று துக்கத்தோடு உணர்ந்து வியாகுலப்படுவாயாக.

4. உன் பாவங்களுக்கிடையில், தேவன் உனக்கும் உன் குடும்பத்துக்கும் செய்திருக்கிற பல தயவுகளை நினைத்து, அவைகளுக்கு எதிராக நீ செய்த அக்கிரமங்களைத் தியானித்து பெருமூச்சுவிட்டு தலைகுனிந்து வெட்கப்படுவாயாக.

5. உன் பாவங்களை உலகத்திலுள்ள பக்தர் எவ்வளவாய் அருவருக்கிறார்களென்றும், உன் பாவங்களெல்லாம் வெளிக்குத் தெரியுமானால் உன்னை எப்படி மதிப்பார்களென்றும், அவைகளை தேவன் மூடியிருக்கிறது உன் மேலிருக்கிற அவருடைய பெரிய தயவென்றும் கவனித்து பச்சாதாபப் படுவாயாக.

6. எப்படியும் நீ உன் பாவ உணர்ச்சியால் கண்ணீர் விட்டு, அந்தக் கண்ணீரின் ருசியை ருசித்து உப்புஜல பானம் செய்தால் நல்லது. வியாதி வந்தால் அழுகிறாயே! சாவு வந்தால் அழுகிறாயே. பிள்ளை அல்லது மனைவி செத்தால் எவ்வளவு கண்ணீர் குடிக்கிறாய்! உன் பாவத்தை உணர்ந்து ஒரு சொட்டு கண்ணீர் சிந்தவேண்டாமா? அப்படி உன் பாவத்துக்காக, நீ கண்ணீர் சிந்த அவசியமில்லாத அற்ப பாவியாக இருக்கிறாயோ? ஆ, நான் பாவிகளில் பிரதானமானவன் என்று எண்ணுவாயாக. அப்படியே அறிக்கையிடுவாயாக.

# 7. சவக்கடல் ஸ்நானம்

51ஆம் சங்கீதம்

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்; என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்

பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாப்பானதைச் செய்தேன். நீர் பேசும்போது உமது நீதி விளங்கவும், நீர் நியாயம் தீர்க்கும்போது உமது பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன். இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந் தரித்தாள். இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர். நீர் என்னை ஈசோப்பால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன். நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படிச் செய்யவும், அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும். என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களை எல்லாம் நீக்கியருளும். தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்; நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமுகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலுமிரும். உமது இரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். தேவனே பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும்; எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக. அப்பொழுது தகனபலியும், சர்வாங்க தகனபலியுமாகிய நீதியின் பலிகளில் பிரியப்படுவீர்; அப்பொழுது உமது பீடத்தின்மேல் காளைகளைப் பலியிடுவார்கள்.

### வேறு (6ஆம் சங்கீதம்)

கர்த்தாவே, உம்முடைய கோபத்திலே என்னைக் கடிந்துகொள்ளாதேயும், உம்முடைய உக்கிரத்திலே என்னைத்

தண்டியாதேயும். என்மேல் இரக்கமாயிரும்; கர்த்தாவே, நான் பெலனற்றுப்போனேன்; என்னைக் குணமாக்கும்; கர்த்தாவே, என் எலும்புகள் நடுங்குகிறது. என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது; கர்த்தாவே, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர். திரும்பவும் கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும்; உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும். மரணத்தில் உம்மை நினைவுகூருவதில்லை; பாதாளத்தில் உம்மைத் துதிப்பவன் யார்? என் பெருமூச்சினால் இளைத்துப்போனேன், இராமுழுவதும் என் கண்ணீரால் என் படுக்கையை மிகவும் ஈரமாக்கி, என் கட்டிலை நனைக்கிறேன். துயரத்தினால் என் கண்கள் குழிவிழுந்து போயிற்று, என் சத்துருக்கள் அனைவர் நிமித்தமும் மங்கிப் போயிற்று. அக்கிரமக்காரரே, நீங்களெல்லாரும் என்னை விட்டு அகன்றுபோங்கள்; கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார். கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார்; கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார். என் பகைஞர் எல்லாரும் வெட்கி மிகவும் கலங்கிப்போவார்கள்; அவர்கள் பின்னாகத் திரும்பி சடிதியிலே வெட்கப்படுவார்கள்.

## வேறு (38ஆம் சங்கீதம்)

கர்த்தாவே; உம்முடைய கோபத்தில் என்னைக் கடிந்து கொள்ளாதேயும்; உம்முடைய உக்கிரகத்தில் என்னைத் தண்டியாதேயும். உம்முடைய அம்புகள் எனக்குள்ளே தைத்திருக்கிறது. உமது கை என்னை இருத்துகிறது. உமது கோபத்தினால் என் மாமிசத்தில் ஆரோக்கியமில்லை; என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை. என் அக்கிரமங்கள் என் தலைக்குமேலாகப் பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப்போல் என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று. என் மதிகேட்டினிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது. நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன்; நாள் முழுவதும் துக்கப்பட்டுத் திரிகிறேன். என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது; என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை. நான் பெலனற்றுப்போய், மிகவும் நொறுக்கப்பட்டேன். என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன்.

ஆண்டவரே, என் ஏக்கமெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது. என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் உள்ளம் குழம்பி அலைகிறது; என் பெலன் என்னைவிட்டு விலகி, என் கண்களின் ஒளிமுதலாய் இல்லாமல் போயிற்று. என் சிநேகிதரும் என் தோழரும் என் வாதையைக் கண்டு விலகுகிறார்கள். என் இனத்தாரும் தூரத்திலே நிற்கிறார்கள். என் பிராணனை வாங்கத் தேடுகிறவர்கள் எனக்குக் கண்ணிகளை வைக்கிறார்கள்; எனக்குப் பொல்லாங்கு தேடுகிறவர்கள் கேடானவைகளைப் பேசி, நாள் முழுதும் வஞ்சனைகளை யோசிக்கிறார்கள். கர்த்தாவே, உமக்குக் காத்திருக்கிறேன்; என் தேவனாகிய ஆண்டவரே, நீர் மறு உத்தரவு கொடுப்பீர். நான் தடுமாறி விழ ஏதுவாயிருக்கிறேன்; என் துக்கம் எப்பொழுதும் என் முன்பாக இருக்கிறது. என் அக்கிரமத்தை நான் அறிக்கையிட்டு, என் பாவத்தினிமித்தம் விசாரப்படுகிறேன். கர்த்தாவே, என்னைக் கைவிடாதேயும்; என் தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும். என் இரட்சிப்பாகிய ஆண்டவரே, எனக்குச் சகாயம் செய்யத் தீவிரியும்.

## வேறு (130ஆம் சங்கீதம்)

கர்த்தாவே, ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். ஆண்டவரே, என் சத்தத்தைக் கேளும். என் விண்ணப்பங்களின் சத்தத்துக்கு உமது செவிகள் கவனித்திருப்பதாக. கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால் யார் நிலைநிற்பான், ஆண்டவரே! உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு. கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன். எப்பொழுது விடியுமென்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற சாமக்காரரைப் பார்க்கிலும், அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது. (ஏனெனில்) கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு. அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொள்வார்.

### வேறு (143ஆம் சங்கீதம்)

கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும்; என் விண்ணப்பங்களுக்குச் செவிகொடும். ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந் தீர்க்கப் பிரவேசியாதேயும். என் ஆவி என்னில் தியங்குகிறது; என் இருதயம் எனக்குள் சோர்ந்துபோகிறது. என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன்; வறண்ட நிலத்தைப் போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது. கர்த்தாவே, சீக்கிரமாய் எனக்குச் செவிகொடும், என் ஆவி தொய்ந்துபோகிறது; நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாகாதபடிக்கு உமது முகத்தை எனக்கு மறையாதேயும். உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

### வேறு

என்னிடத்தில் அன்புகூர்ந்து, தம்முடைய இரத்தத்தினாலே என்னுடைய பாவங்களற என்னைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக என்னை இராசாவும் ஆசாரியனுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக ஆமென் (வெளி. 1:6).

# 8. ஞான உடுப்பு அறை

பாவ உணர்வால், பாவ அறிக்கைசெய்து, உன் ஆத்துமாவைக் கழுவின சகோதரனே, இனிமேல் நீ தரித்து அலங்கரித்துக்கொள்ள வேண்டிய ஆடையாபரணங்களைப்பற்றி சில காரியங்களை உணர்த்துகிறேன். ஏனெனில் உன்னை விருந்துக்கு அழைக்கிறவர் மகா பரிசுத்தமுள்ள தேவன் என்பதை நீ அறிவாயாக. அவர் உனக்குப் பாராட்டும் தயவால் தமது பரிசுத்தத்தை மறந்துபோகமாட்டார். நீயும் உனக்குப் பாராட்டப்படும் தயவை நினைத்து அசட்டையுள்ளவனாயிருக்கலாகாது. நீ உன் பச்சாதாபத்தாலும் பாவ அறிக்கையாலும் உன்னுடைய பழைய மனுஷனாகிய கெட்ட

சுபாவங்களனைத்தையும் களைந்து போட்டாயானால் பின் வரும் நற்குண நற்செய்கைகளால் உன்னை அலங்கரிக்க வேண்டியது.

ஆகாஸ்வேர் இராஜாவின் கொலுமண்டபத்தை நோக்கி மொர்தெகாய் வந்தபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டு உடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு, அலறி அரமனை வாசல் முகப்புமட்டும் வந்தாலும், அப்படிப்பட்ட உடை யோடு, அரமனை வாசலுக்குள் பிரவேசிக்க ஒருவனுக்கும் உத்தரவில்லை யாதலால் எஸ்தர் ராணி அவனை உடுத்துவிக் கிறதற்கு வஸ்திரங்களை அனுப்பினாள். நீ போகவேண்டிய விருந்து மண்டபமோ அதிலும் மேன்மை பொருந்தியது. அதற்கேற்ற உடுப்புகளைத் தரித்துக்கொள்ளும்படி இந்தச் சோலைக்குள்ளிருக்கும் உடுப்பு அறைக்குப் போகலாம் வா.

1. 'நீதியைத் தரித்துக்கொண்டேன்; அது என் உடுப்பாயிருந்தது; என் நியாயம் எனக்குச் சால்வையும் பாகையுமாயிருந்தது' (யோபு 29:14).

### ஜெபத்தியானம்

கர்த்தாவே, நீதியை எனக்கு உடையாகவும், நியாயத்தை எனக்குச் சால்வையாகவும் தந்தருளும்.

2. 'துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாம லிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள் ளுங்கள்' (ரோம. 13:14).

### ஜெபத்தியானம்

கர்த்தாவே, நான் இவ்வுலகத்திலுள்ள பிரபுக்கள், தன வான்களைப்போல் செருக்காய் இருக்கவும் வாழவும் நாடா மல், என் இரட்சகராகிய இயேசு தமது உடலை எப்படி மிதத்தோடும், ஒழுக்கத்தோடும் நடத்தி வந்தாரோ அதே மாதிரியைப் பின்பற்றி, மட்டாய்ப் புசித்து, மதுபானம் விலக்கி, கற்பால் காத்து ஜீவிக்கும்படி கடாட்சம் செய் தருளும்.

3. 'கர்த்தராகிய இயேசுவின் அச்சடையாளங்களை நான் என் சரீரத்தில் தரித்துக்கொண்டிருக்கிறேன்' (கலா. 6:17).

### ஜெபத்தியானம்

**ஆ**ண்டவரே, பரி. பவுல் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பட்ட பாடுகளின் நினைவையும், காயங்களின் வடுக்களையும் விசேஷித்து ஜீவித்தாரென்று பார்க்கிறேன். நானும் அவர் நிமித்தம் நேரிடும் எல்லா நிந்தைகளையும் அவமானங்களையும் அடிகளையும் காயங்களையும் பொறுமையோடு சகித்து, இரட்சகராகிய இயேசுவின் அச்சடையாளங்களை என் சரீரத்தில் தரித்திருக்கிறேன் என்று நானும் மேன்மை பாராட்டிப் பேசத்தக்க தயவைத் தந்தருளும்.

4. 'உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்' (எபே. 4:23,24).

### ஜெபத்தியானம்

**ப**ரிசுத்தமுள்ள பிதாவே, என்னுடைய பழைய கெட்ட சுபாவங்களையெல்லாம் அழித்து, புதிய சுபாவங்களை உண்டாக்கி விருத்தியாக்கியருளும். என்னில் நன்மைக்கேதுவான புதிய மாறுதல் உண்டாயிருக்கிறதென்று நானும், என் வீட்டாரும், என் பந்துக்களும், என் ஊராரும் அறியும்படி இயேசுவின் குணத்துக்கேற்ற புதிய குணங்களை எனக்குத் தாரும்.

5. 'நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும், தரித்துக்கொள்ளுங்கள்......கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்...... பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது......கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே, சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக...... ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி...... எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசு

வின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாக பிதா வாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்' (கொலோ. 3:12–17).

## ஜெபத்தியானம்

ஆ! இந்தச் சிறந்த குணங்களில் எத்தனையோ எனக்கு இல்லை. என்னிடத்தில் இல்லாத......குணங்களை கர்த்தாவே, எனக்குத் தந்தருளும்.

6. 'பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயி ருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச் சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்' (1 தெச. 5:8).

## ஜெபத்தியானம்

மெய்யாகவே இந்த மார்க்கவசத்தோடும், தலைச் சீராவோடும் நான் வீட்டிலிருக்கும்போதும், வெளியே நடக் கும்போதும் காணப்பட்டால் எவ்வளவு அற்புதமாய் விளங்கு வேன். இயேசுவே இவைகளை எனக்கு அணிந்துபாரும்! அப்போது நீரும் மகிழுவீர், நானும் மகிழுவேன். விசு வாசத்தை என் வலது மார்பிலும், அன்பை என் இடது மார்பிலும், பெரிய பதக்கம் போல் தொங்கவைத்து, இரட்சிப் பின் நம்பிக்கையை என் தலையிலே சூட்டுமையா!! இந்த அலங்கார உடையின்மேல் அதிக வாஞ்சையாயிருக்கிறேன்.

7. அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது' (1 பேது. 3:4).

## ஜெபத்தியானம்

கர்த்தாவே, நான் அடிக்கடி என் கண்ணுக்கும் மற்ற வர்கள் கண்ணுக்கும் அலங்காரமான பட்டுவஸ்திரங்கள், சரிகை உடுப்புகள், பொன்னாபரணங்கள், இரத்தின மோதி ரங்கள் ஆகிய இவைகளோடு வெளிப்புறப்படுகிறதுண்டு. உம்முடைய பார்வையில் விலையேறப்பெற்ற ஆபரணங் களோ, இருதயத்தில் நிலைப்பட்டு மறைந்திருக்கிற சாந்தம்

அமைதல் என்னும் குணங்கள் என்று காண்கிறேன். இக்குணங்களில் நான் பழகி உமக்குப் பிரியமானவனாகும்படி கிருபை செய்தருளும். என் வஸ்திராபரணங்களால் எனக்கு பெருமைக்காரன், டம்பக்காரன் என்ற பேர்தான் கிடைக்கிறது. உம்முடைய ஆபரணங்களால் எனக்கு ஒரு நாளும் பழிப்பான பேர் வரவேமாட்டாது.

8. 'நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்' (1 பேது. 5:5).

### ஜெபத்தியானம்

கீழ்ப்படிதலிலும், மனத்தாழ்மையிலும் பேர்போன இயேசுவே இந்தக் குணங்களையும் எனக்குத் தந்தருளும். தாழ்மையுள்ளவர்களுக்கோ நீர் கிருபை அளிக்கிறீர். அடிக்கடி என்னிடத்தில் மாயமான தாழ்மை காணப்பட்டதுண்டு. உமக்குப் பிரியமான தாழ்மையால் என்னை முடிசூட்டியருளும்.

### போதனை

சிநேகிதனே நீ நீதியின் உடைதரித்து, நியாய சால்வையைப்போர்த்து, இயேசுகிறிஸ்துவின் சாயலாகமாறி அவர் நிமித்தம் நேரிடும் சகல அவமானங்களையும் சகித்து, பாடுகளையும் பொறுமையோடு ஏற்றுக்கொண்டு, புதிய மனுஷனாகவேண்டியது. உனக்குள் இரக்கம், தயவு, தாழ்மை, பொறுமை, கீழ்ப்படிதல், மன்னிக்கும் குணம், வேத அறிவு, ஜெபஸ்தோத்திரம் ஆகிய சிறந்தகுணங்களுண்டாக வேண்டியது. விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய இம்மூன்றும் உனக்குள் விசேஷித்து விளங்கவேண்டும். தேவ சமாதானத்தில் உன் இருதயம் ஆளப்படவேண்டும். அப்பொழுது நீ அந்தப் பரமவிருந்துக்குச் சரியாய் ஆயத்தப்பட்ட பிரியமான விருந்தாளியாவாய்.

### ஜெபம்

பரம பிதாவே! உம்முடைய பந்திக்கு வரவேண்டியவன் எவ்வளவு பரிசுத்த அலங்காரத்தோடு வரவேண்டியதென்று

காண்கிறேன். ஆதித்தாய் தந்தைகளின் அத்திஇலையுடையை மாற்றி புது உடை கொடுத்தவரே, என் பழைய குணங்களை யெல்லாம் மாற்றி உமது பக்திக்கேற்ற புதிய குணங்களால் என்னை உடுத்தியருளும். யோசுவா ஆசாரியன் உமது சமுகத்தில் வந்தபோது 'இவன் மேலிருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்து போடுங்கள்' என்று உத்தரவானதே! அதே உத்தரவு எனக்காகவும் உமது சமுகத்திலிருந்து பிறப்பதாக. என்னை உமக்கேற்ற சிறந்த வஸ்திரங்களால் உடுத்தி உமது விருந்து மண்டபத்துக்குள் சேர்த்தருளும் பிதாவே. ஆமென்.

# 9. விருந்து மண்டப நடைசாலை

நேசனே நீ உன்னை ஸ்நானம் செய்து உடுத்திக்கொண்டாயே; இனி இருவரும் அதோ மேட்டின் மேலிருக்கும் விருந்து மண்டபத்துக்கு நடந்துபோவோம், வா. நாம் போகும்போதே, அங்கே கிடைக்கும் விருந்தைப் பற்றிப் பேசிக்கொள்வது இன்பமாயிருக்கும்.

## சம்பாஷணை

**சீஷன்:** இந்த விருந்தை முதலாவது ஏற்படுத்தினது யார்?

**போதகன்:** கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இரவு ஏற்படுத்தினார்.

**சீஷ:** இந்த விருந்துக்கு விசேஷ பேருண்டோ?

**போத:** 'கர்த்தருடைய இராப்போஜனம்'—'நற்கருணை'—'ஆறுதல் செய்யும் சாக்கிரமெந்து'—'பரிசுத்த இரகசியம்'—'பரிசுத்த பந்தி'—என்று இப்படி பலபேர்களுண்டு.

**சீஷ:** இது ஏற்படுத்தப்பட்ட நோக்கமென்ன?

**போத:** கிறிஸ்து பலியாக அடைந்த மரணத்தையும் அதினாலே நாம் பெற்றுக்கொள்ளுகிற நன்மைகளையும் இடைவிடாமல் நினைவு கூரும்படி இதை ஏற்படுத்தினார்.

சீஷ: இதுபோன்ற நியமத்தை வேறெந்த இராஜாக்களாவது தங்கள் மரண சமயத்தில் ஸ்தாபித்ததுண்டோ?

போத: அப்படி ஒருவரும் ஸ்தாபிக்கவில்லை. இதினால் இதை ஸ்தாபித்த இயேசு தேவன் என்று விளங்குகிறது.

சீஷ: தேவனுடைய விருந்துக்குப் போகிறது எவ்வளவு பாக்கியம்? கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவது நமக்கு எவ்வளவு சலாக்கியம்?

போத: ஆம், இது நமக்குக் கிடைத்த பாக்கியந்தான், சலாக்கியந்தான். இந்த விருந்தை இயேசு தமது அன்புக்கு அத்தாட்சியாகவும், தமது மரணத்தைப்பற்றிய என்றுமுள்ள ஞாபகமாகவும் ஸ்தாபித்தார்.

சீஷ: அப்படியானால் நாம் அந்த விருந்து மண்டபத்தில் நமது இரட்சகரின் அன்பையும், அவருடைய மரண வரலாறையும் நினைவு கூரவேண்டுமாக்கும்.

போத: ஆம், ஆம். அவருடைய அன்பை நினைக்கையில், அவர்பேரில் அன்பில் பெருகவேண்டும்; அவருடைய மரண வரலாற்றை நினைக்கையில் என்னிமித்தம் இவ்வளவு பாடுகளுக்குள்ளானாரே என்று உணரவேண்டும்.

சீஷ: இப்படி. இரட்சண்ய அன்பை நினைவுகூர பூர்வத்தாருக்கு சலாக்கிய மிருந்ததில்லையோ?

போத: அந்தச் சலாக்கியம் முற்றிலும் இருக்கவில்லை யென்று சொல்லக்கூடாது. ஏனெனில் நமது இயேசு உலக தோற்றத்துக்கு முன்னே நமக்கு இரட்சகராகக் குறிக்கப்பட்டிருந்தார் (1 பேது. 1:20). அவர் உலக தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டிக்குட்டி என்றும் அழைக்கப்படுகிறார் (வெளி. 13:8). முன் காலத்திலுள்ளவர்கள், அவரால் நிறைவேற்றப்படப்போகிற மீட்பின் கிரியையை, சில முன்னடையாளங்களால் நினைவு கூர்ந்து வந்தார்கள். நாம் அடையாளத்தையல்ல நேராக அந்த இரட்சண்ய வரலாற்றை இந்த நியமத்தால் நினைத்து வருகிறோம்.

சீஷ: முன்னுள்ளோர் இந்த இரட்சிப்பை எந்தெந்த அடையாளங்களால் நினைவுகூர்ந்து எதிர்பார்த்தார்கள் என்று சொல்லுமையா?

போத: பழைய ஏற்பாட்டிலுள்ள மூன்று விஷயங்களை இந்தத் திருவிருந்துக்கு முன் அடையாளமாகச் சொல்லலாம். அவையாவன:—ஜீவவிருட்சம், பஸ்கா ஆடு, மன்னா ஆகிய இவைகளே.

சீஷ: ஜீவவிருட்சத்தின் அடையாளமென்ன?

போத: பூமிக்குரிய பரதீசில் வைக்கப்பட்டிருந்த ஜீவ விருட்சத்தின் கனியைத் தின்று, பாவமில்லாதபடி காலங் கழித்தால் நமது சுகமும், பெலனும், ஜீவனும் பழுதுபடாமல் என்றைக்கும் உயிரோடிருப்போம். அப்படிப்பட்ட தத்துவம் அந்த ஜீவவிருட்சத்தின் கனியிலிருந்தது. இந்த விருந்தில் நாம் ஜீவனின் மூலமாகிய இயேசுவால், விசுவாசத்தின் மூலமாய் ஆவிக்குரிய ஜீவனையடைந்து, பரம வரங்களில் பெருகி, ஆத்தும பெலனடைந்து, இரண்டாம் மரணத்தின் அதிகாரத்துக்கு முற்றிலும் நீங்கி விடுகிறோம்.

சீஷ: பஸ்கா ஆட்டின் அடையாள மகத்துவமென்ன?

போத: இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டதையும், சங்கார தூதனுடைய பட்டயத்துக்கு விலக்கிக் காக்கப்பட்டதையும் உணர்த்தின பஸ்கா ஏற்பாடானது பாவ அடிமைத்தனத்திலிருந்தும், தேவ கோபத்திலிருந்தும் நாம் இயேசுவினால் விடுதலையாக்கப்படுவதையும் தப்பிப்பிழைப்பதையும் முன் அறிவித்தது. பரிசுத்த இராப்போசனமானது அந்த வரலாற்றை நமக்குமுன் ஞாபகப்படுத்துகிறதால், அதை ஆசரிக்கும்போது 'நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மையென்னும் புளிப்பில்லா அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்' (1 கொரி. 5:7,8). என்ற சத்தியத்தை உணர்ந்தவர்களாய் நாம் இந்த விருந்தில் பங்கு பெறவேண்டும்.

சீஷ: மன்னாவின் முன் குறிப்பு எப்படி?

போத: மன்னாவென்னும் மகத்துவபோஜனம், இஸ்ரவேலின் வனாந்தர பிரயாணத்தின் ஆகாரமாக ஆண்டவரால்

அந்தரத்திலிருந்து அற்புதமாகப் பெய்த வரலாறு தெரியுமே. அந்த அற்புத போஜனம்; இயேசுதான். 'வானத்திலிருந் திறங்கி, உலகத்தில் ஜீவனைக் கொடுக்கிற ஜீவ அப்பம் நானே' என்று இயேசு சொல்லியிருக்கிறார். நாம் நமது ஜீவகால பயணத்தில் இயேசுவின் மாதிரியை நமது படமாகவும், அவருடைய உபதேசத்தை நமது பிரமாணமாகவும், அவருடைய பாடுகளை நமது தியானமாகவும் வைத்துக்கொண்டு இந்த விருந்தை உட்கொண்டு வந்தால் விசுவாசத்தால், நமது ஆத்துமா அவரையே ஆவியின் பிரகாரமாகப் புசித்து மகிழ்ச்சியடைந்து நித்திய ஜீவியத்தை அநுபவிக்கும்.

சீஷ: நமது பரிசுத்த இரட்சகர் இந்த ஏற்பாட்டை முதலாவது கொண்டாடின மாதிரி எப்படி?

போத: 'கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப் பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு சீஷருக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படியாக இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையா யிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்பொழுதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்' என்று திருவாய் மலர்ந்தருளிக் கொண்டாடினார். இப்பொழுது நாம் போகிற விருந்து மண்டபத்திலேயும் இதே வாசகத்தால் தான் நமது பந்திப் பதார்த்தங்களும் ஆசீர்வதிக்கப்படும்.

சீஷ: இதோ விருந்து மண்டபத்தின் மலையடிவாரத்தில் வந்து விட்டோம். விருந்து நேரத்தில் நான் நடந்துகொள்ள வேண்டிய முறையென்ன?

போத: உன்னோடுகூட வந்திருக்கும் விருந்தாளிகள் எப்படி சரீரப் பிரகாரமாய்த் தங்கள் பணிதலை நடத்துகிறார்களோ, அதே பிரகாரம் நீயும் நடந்துகொண்டால் போதும். ஆனால் நீ மற்ற விருந்தாளிகளைப் பற்றியாவது, உனக்குப் பங்கிடப்படும் பதார்த்தங்களையாவது கவனிக்கவே கூடாது.

'இதோ, என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்துக்கு வாருங்கள்' (மத். 22:4).

'ஆத்துமாவே உன்னைச் சோட
துக்கம் யாவையும் விடு
மீட்பரிடத்தில் ஓடி
சேரச் சாக்கிரதைப்படு
கர்த்தர் உன்னை
பந்திக்கு அழைக்கிறார்.'

ஜெபம்

என் பாவத்தையும் அழுக்கையும் நோக்காமல் என்னையும் கலியாண விருந்துக்கு அழைக்கிற பிதாவே! நீர் அழைக்கும் சத்தம் என் காதில் விழவே என் இருதயம் துள்ளுகிறது. பரம இராஜாவே, உமது குமாரனுடைய கலியாண விருந்தில் எனக்கும் பங்குண்டென்று கேள்விப்படுவது தேவ தூதருக்கு அதிசயத்தைக் கொடுக்கிறது. நீரே தயவு மிகுந்தவர். உம்முடைய விருந்தின் பலம் என் ஆவிக்குரிய பலவீனத்தையெல்லாம் மாற்றி, நான் என் ஜீவகாலத்தை உமது நாமத்தின் மகிமைக்கென்று செலவிடும்படி ஏவுமென்று நம்புகிறேன். இந்த விருந்துக்கழைக்கும் தேவனே, உமது அழைப்புக்காக உம்மை ஸ்தோத்திரித்து தாழ்மையோடு பணிந்து உமது விருந்து மண்டபத்துக்குள் பிரவேசிப்பேனாக.

# 10. விருந்து மண்டபம்

'என்னை விருந்து சாலைக்கு அழைத்துக்கொண்டுபோனார்; என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே' (உன்ன. 2:4).

தியானம்

என் பாவத்தாலும் அழுக்காலும் நான் கூச்சத்தோடு விருந்து சாலை சேர்ந்தேன். விருந்துக்கேசமாகிய

தேவாட்டுக் குட்டியானவர் என் கையைப் பிடித்து விருந்து சாலையின் மகத்துவங்களையெல்லாம் காட்டுகிறார். அவர் ஒரு கொடியும் பிடித்திருக்கிறார். அந்தக் கொடியின் நிழலும், அது வீசும் காற்றும் எனக்குள் இம்மட்டுமில்லாத புதிய நேசத்தை உண்டாக்கிற்று. அக்கொடி என்னைத் தொட்டாலோ என் நேசம் பொங்கி ஸ்தோத்திர கீதங்களைப் பாடச் செய்கிறது. இந்த விருந்து சாலையை விட்டுப்போக எனக்கு மனம் வருகிறதில்லை. ஆ! நேசமே, தேவநேசமே! இரட்சண்ய நேசமே என்னை ஆண்டு கொள்வாயாக.

ஆ என்மேல் பறக்கும் நேசம் என்னும் கொடியின் பாச வாசனையால் நான் சோகமடைந்திருக்கிறேன். என் நேசரே! கொல்கொதா நேசரே!! நீர் என்னை உமது சரீரத்தாலும் இரத்தத்தாலும் போஷித்தாலன்றி என் சோகம் தீராது. உமது பரிசுத்த புறா தமது செட்டைகளால் வீசி என் காதுகளில் தமது தேற்றுதல் மொழிகளைக் கூறாத பட்சத்தில் என் சோகம் தீராது. இவ்வளவு நேசசோகத்தை எனக்குத் தந்ததற்காக உமக்கே ஸ்தோத்திரம்.

'கலியாண சாலை விருந்தாளிகளால் நிறைந்தது' (மத். 22:10).

## தியானம்

ஆ நேச இயேசுவே, என் சோகம் விருந்தாளிகளின் காட்சியால் அதிகப்படுகிறது. ஆ எத்தனையோ லட்சாதி லட்சம் பேர் வந்திருக்கிறார்கள். சந்தோஷம்—சந்தோஷம். ஆனால் இன்னும் மலையாளத்து இராஜாவையும், மைசூர் ராஜாவையும், வேறு பல இத்தேச அரசரையும், பிரபுக்களையும், பெரியோரையும் இந்த விருந்து சாலையில் காணோம். அவர்கள் இந்த விருந்தை அசட்டை செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் இந்த விருந்து சாலையில் இடமுண்டு, அவர்களை உமது ஆவியைக்கொண்டு உணர்த்தி, உமது நேசமாகிய பரிமளத்தால் இழுத்தருளும் இரட்சகா!!

# 11. எச்சரிப்புகள்

'பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை' (எபி. 12:14).

'எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானே, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்' (1 கொரி. 11:27).

'அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால் தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்' (1 கொரி. 11:29).

'விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு: சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டார்; அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங் காலும் கட்டிக்கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றார்' (மத். 22:11-13).

'தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்' (எபி. 10:29).

ஜெபம்

1. பரம பிதாவே, பரிசுத்த பிதாவே, உம்மை என் ஆவி தரிசிக்கும்படி என்னைப் பரிசுத்தனாக்கியருளும். நான் இந்தப் பந்தியில் அபாத்திரமாய் போஜனபானம் பண்ணி உமது சரீரத்துக்கும் இரத்தத்துக்கும் குற்றமுள்ளவனாகாதபடிக்கும், எனக்கே ஆக்கினைத்தீர்ப்பை வருவித்துக்

கொள்ளாதபடிக்கும் என்னைப் பாத்திரவானாக்கியருளும். ஆமென்.

2. விருந்தை அளிக்கும் பரம இராஜாவே, உமது விருந்தாளிகளுக்கு நீர் இனாமாகக்கொடுக்கும் கலியாண வஸ்திரத்தை எனக்குத் தந்து என்னை உடுத்தியருளும். என் கந்தை அறிந்து உமது கலியாண வஸ்திரத்தைத் தாரும். என் நிருவாணம் அறிந்து உமது தோல் அங்கியைத்தாரும். என் அழுக்கை அறிந்து உமது வெண்ணுடையால் என்னை மூடியருளும். ஆமென்.

3. பிதாவே! உமது குமாரனுடைய இரட்சிப்பையும் உமது கிருபையின் ஆவியையும் நான் முன்போல அவமதியாமலும் அசட்டை செய்யமாலுமிருக்கும்படிக்கும், உமது குமாரனின் இரத்தத்தால் கழுவப்பட்டு உமது ஆவியால் பலப்படுத்தப்படவும் என்மேல் கிருபையாயிரும் பிதாவே.

## ஜெபகீதம்

1. என் பாவத்தின் நிவர்த்தியை
உண்டாக்க அன்பாய் ஜீவனை
கொடுத்துச் சிலுவையிலே
மரித்த தேவ மைந்தனே!

2. எல்லாருக்கும் நீர் ரட்சகர்
தவிப்புள்ளோர்க்குத் தாரகர்
மருந்து நீர் ஆ என்னையும்
குணப்படுத்தி இரட்சியும்.

3. அநேக பாவம் செய்தோனாய்
மா நீசனும் ஏழையுமாய்
இராப்போஜனத்துக்கு வரும்
அடியேனைத் தள்ளாதிரும்.

4. எனது தஞ்சமானீரே
குணமளியும் இயேசுவே
அசுத்தமான யாவையும்
நிவிர்த்தியாக்கியருளும்.

5. இருண்ட நெஞ்சில் ஒளியும்
ஞானமும் விசுவாசமும்
கொடுத்தென் பாவகுணத்தை
அகற்றிப்போடும் கர்த்தரே.

6. நான் சாகும்போதென் ஆவியை
நீர் சேர்த்துக்கொள்ளும் மோட்சத்தை
அடையச்செய்யும் கர்த்தரே
புகழ் உமக்குண்டாகவே.

'நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை' (ரோம. 12:1).

# 12. வாழ்த்து வாசகங்கள்

'நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்' (மத். 5:6).

'அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம். இஸ்ரவேலே நீ பாக்கியவான்; கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்?' (உபா. 33:27,29).

'ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப் பட்டவர்கள் பாக்கியவான்கள்' (வெளி. 19:7,9).

'கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான் கள் என்றெழுது' (வெளி. 14:13).

'ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு தேவனுடைய பூங்காவனத்தின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்' (வெளி. 2:17).

'ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள்......இந்த

அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்' (யோவா. 6:48,49,51).

### ஆயத்த ஜெபம்

'இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் உம்முடைய பந்தியில் சேரத் துணியாமல் தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பிச் சேருகிறோம். உம்முடைய மேசையின்கீழ் விழும் துணிக்கைகளையும் பொறுக்கிக்கொள்ள நாங்கள் பாத்திரரல்ல; ஆனாலும் தேவரீர் எப்பொழுதும் இரக்கம் செய்கிற லட்சணமுடைய மாறாத ஆண்டவராயிருக்கிறீர். ஆகையால் கிருபையுள்ள கர்த்தாவே, உமது அருமையான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்தால் எங்கள் பாவமுள்ள சரீரம் சுத்தமாகி, அவருடைய விலையுயர்ந்த இரத்தத்தால் எங்கள் ஆத்துமா கழுவப்படுவதற்கும், எப்பொழுதும் நாங்கள் அவருக்குள்ளும் அவர் எங்களுக்குள்ளும் வாசமாயிருப்பதற்கும் ஏற்ற விதமாய் அவருடைய சரீரத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணக் கிருபைசெய்தருளும்.' ஆமென்.

# 13. இராப்போசனப் பந்தி

## 'என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்'

கவனிப்பு:—இப்பொழுது இராப்போசனப் பந்தியிலிருக்கிற ஆத்துமாவே! உன் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் வரலாறு அனைத்தையும் பக்திவினயத்தோடு நினைவுகூரக்கடவாய். அதற்கு உதவியாகப் பின் வரும் குறிப்புகளைக் கவனித்துக்கொள்.

### தேய்வீக நினைவு

1. அவர் ஆதியிலிருந்த வார்த்தையானவர் (யோவா. 1:1).

2. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று (யோவா. 1:2).

3. வார்த்தையானவரே மாமிசமானார் (யோவா. 1:14).

4. அவர் சர்வத்துக்கும் மேலான தேவன் (ரோம. 9:5).

5. அவர் மாறாதவர், சர்வ வியாபகர், சர்வ வல்லவர், சுயம்பு (எபி. 13:7,8; யோவா. 21:17; வெளி. 1:8; கொலோ. 2:9).

6. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார் (பிலி. 2:6,7).

7. அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நாம் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு நமது நிமித்தமே தரித்திரரானார் (2 கொரி. 8:9).

8. அவர் பரலோகத்திலிருந்து இறங்கினவர் (யோவா. 3:13).

## மனுஷீக நிலைவு

1. இயேசு கன்னிமரியம்மாளிடத்தில், பரிசுத்த ஆவியினாலே உற்பவித்துப் பிறந்தார் (லூக். 1:35).

2. இடையர் பாலியத்தில் பணிந்தார்கள் (லூக். 2:16).

3. தூதர் அவரைப்பற்றிப் பாடினார்கள் (லூக். 2:14).

4. எட்டாம் நாள் விருத்தசேதனம் பெற்றார்; இரட்சகர் என்ற (இயேசு) பட்டப் பேர் பெற்றார் (லூக். 2:21).

5. நாற்பதாம்நாளில் பிரதிஷ்டையாக்கப்பட்டார் (லூக். 2:23).

6. சுமார் இரண்டாம் வயதில் சாஸ்திரிகளால் வணங்கப்பட்டார் (மத். 2:11).

7. அப்பால் எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டார் (மத். 2:14).

8. பன்னிரண்டாம் வயதில், சாஸ்திரிகளோடு சம்பாஷித்து, தமது பிதாவுக்கடுத்த வேலையில் கரிசனைப்பட்டார் (லூக். 2:46–49).

9. அப்பால் ஞானத்திலும் வயதிலும் தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் விருத்தியடைந்தார் (லூக். 2:52).

10. முப்பதாம் வயதில், யோவான்ஸ்நானகனால் தீட்சை பெற்றார். அப்போது வானம் திறக்கப்பட்டது (மத். 3:13–17).

11. அப்பால் நாற்பது நாள் பிசாசால் சோதிக்கப்பட்டு, அவனை ஜெயித்தார் (மத். 4:1–11).

12. அது முதல் மூன்று வருஷத்துக்கதிகமாய், அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார் (அப். 10:38).

13. அவரிடத்தில் வந்த நோயாளிகள் எல்லாரும் சுகமானார்கள் (மத். 9:35).

14. அவர் மரித்தோரையும் எழுப்பினார் (யோவா. 11:43).

15. பல இடங்களில் சுற்றித்திரிந்து பிரசங்கம் செய்து வந்தார்.

16. பரிசுத்த இராப்போசனத்தை ஸ்தாபித்தார் (லூக். 22:19).

17. அடிக்கடி ஜெபத்தியானம் செய்து வந்தார்.

18. கெத்செமனேயில் இரத்த வேர்வை சிந்த ஜெபித்தார் (லூக். 22:39–44).

19. யூதாசால் காட்டிக் கொடுக்கப்பட்டார்.

20. சத்துருக்களால் கட்டப்பட்டார்.

21. பிரதான ஆசாரியராலும், சங்கத்தாராலும் விசாரிக்கப்பட்டார்.

22. பேதுருவால் மறுதலிக்கப்பட்டார்.

23. ஏரோதுவால் பரியாசம் செய்யப்பட்டார்.

24. பிலாத்துவால் மரணாக்கினைக்குள்ளானார்.

25. அவர் வாரால் அடிக்கப்பட்டார், முள்முடி சூட்டப்பட்டார், சிவப்பங்கி தரிக்கப்பட்டார், துப்பப்பட்டார், குட்டப்பட்டார், நிந்தை செய்யப்பட்டார்.

26. அவரிடத்தில் ஒரு குற்றமும் காணப்படவில்லை.

27. அவர் சிலுவை சுமந்துபோனார்.

28. கொல்கதாமலையில் அவரை இரண்டு கள்ளரோடு சிலுவையில் அறைந்தார்கள்.

29. அவர் சிலுவையிலிருந்து ஒரு பாவியை இரட்சித்தார்.

30. அவர் பொறுமையோடு தமது பாடுகளனைத்தையும் நமக்காகச்சகித்து, தலையைச் சாய்த்து, ஜீவனைப்பிராயச்சித்த பலியாக பிதாவின் கையில் ஒப்புவித்தார்.

31. அவரை அடக்கம்செய்து, கல்லறையை முத்திரை வைத்தார்கள்.

32. அவர் மூன்றும் நாளில் கல்லறையைவிட்டு உயிர்த்தெழுந்து பலருக்கும் காட்சியானார்.

33. அவர் உயிரோடெழுந்த நாற்பதாம் நாளில் அநேகர் காண பரமேறிப் போனார்.

ஜெபம்

'என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்' என்று கட்டளையிட்ட ரட்சகா, இச்சமயத்தில் நான் தேவரீருடைய வரலாறு அனைத்தையும் நினைவுகூருகிறேன். தேவனாயிருந்த நீர் என்னிமித்தம் மனுஷனாகத் தாழ்ந்தது என்ன இரக்கம்! நீர் தாழ்ந்தீர், நான் உயர்ந்தேன்; இதென்ன அதிசயம்! தேவரீருடைய மட்டில்லாத அன்பை நினைத்து உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நான் உமது அன்பின் வரலாற்றை எப்போதும் நினைவுகூர்ந்து, நாளுக்குநாள் உமதுபேரிலுள்ள அன்பில் பெருகும்படி தயவுசெய்தருளும். ஆமென்.

ஜெபம்

'என் இரட்சிப்புக்காக சொல்லமுடியாத பாடுகளையும், அவமானத்தையும் சகித்து மரணத்தையும் உத்தரித்த நேச இயேசுவே, தேவரீருடைய இரத்த வேர்வையையும், பெருமூச்சையும், அடிகளையும், இரத்த ஓடைகளையும் விசுவாசத்தால் கண்ணோக்கி உம்மை வணங்குகிறேன். உமது மேலுள்ள என் விசுவாசத்தை நிலைப்படுத்தும். இந்தப்

பாடுகளை எல்லாம் எனக்காக நீர் பட்டீரென்று நான் உணர்ந்துகொள்ளுகிறேன். இந்த உணர்ச்சியையும் விசுவாசத்தையும் எனக்குள் நிலைப்படுத்தியருளும் சுவாமி.' ஆமென்.

## ஜெபம்

'என்னை மீட்பதற்காக இவ்வளவு அகோர கஸ்திகளையெல்லாம் பட்ட இயேசுவே, நீர் என்னைக் கைதூக்கி இரட்சித்து ஆதரிப்பீர் என்று நம்புகிறேன். இந்த நம்பிக்கையால் நான் உம்மையே நாடி ஜீவித்து, கடைசியாக உமது பரம இராச்சியத்தின் சுதந்தரங்களிலும் பங்கு பெறும்படி அநுக்கிரகம் செய்தருளும் சுவாமி.' ஆமென்.

## விண்ணப்பம்

லோக மீட்பராகிய இயேசுகிறிஸ்துவே ஏழைப்பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும்.

தேவரீருடைய பரிசுத்த மனுஷாவதார இரகசியத்தினிமித்தமும், உமது பரிசுத்த பிறப்பு விருத்தசேதனத்தினிமித்தமும் உமது ஞானஸ்நானம், உபவாசம், சோதனையினிமித்தமும்,

என்னை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே!

தேவரீருடைய மனவேதனை இரத்த வேர்வையினிமித்தமும், உமது சிலுவைப்பாடுகளினிமித்தமும், உமது அருமையான மரணத்தினிமித்தமும், நீர் அடக்கம்பண்ணப்பட்டதினிமித்தமும் மகிமையோடே உயிர்த்தெழுந்து பரமண்டலம் ஏறினதினிமித்தமும் பரிசுத்த ஆவி வந்ததினிமித்தமும்,

என்னை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே!

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியே, உமது சமாதானத்தை எனக்கு அருளிச்செய்யும்.

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியே எனக்கு இரங்கும்.

உலக இரட்சகரே, உமது சிலுவையினாலும் அருமையான உமது இரத்தத்தினாலும் என்னை மீட்டுக்கொண்ட கர்த்தாவே,

என்னை இரட்சித்து, என்னைப் பரிசுத்தவானாக்கவேண்டு மென்று தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

'நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போழுதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்' (1 கொரி. 11:26).

## கவனிப்பு

நாம் பரிசுத்த இராப்போசனத்தைக் கொண்டாடி அதில் பங்குபெறும்போது நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து வின் மரணத்தை விசேஷமாய்த் தெரிவிக்கவேண்டியது. (1) அப்பாடுகள் ஒவ்வொன்றையும் பிதாவாகிய தேவனுக் குத் தெரிவித்து, அந்தப் பாடுகளினிமித்தம் நமக்குச் சகாயம் செய்யவேண்டுமென்று கெஞ்சவேண்டும். (2) அப்படியே அப்பாடுகளை மற்ற மனுஷருக்கும் வெளிப்படுத்தி, இரட்ச கரின் அன்பின் மகத்துவத்தைப் பிரஸ்தாபிக்கவேண்டியது. ஆதலால் இயேசுவின் மரண சம்பந்தமாகப் பின்வரும் தியானங்களையும் ஜெபங்களையும் பத்திவிநயத்துடன் பிரயோகிப்பாயாக.

## 1. இயேசுவின் வியாகுலம்

'இயேசு கெத்செமனே என்னப்பட்ட இடத்துக்கு வந்து .........துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினர். அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடு கூட விழித்திருங்கள் என்று சொல்லி, சற்று அப்புறம் போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத் திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படிச் செய் யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத் தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினர்' (மத். 26:36–39).

### தியானம்

என் ரட்சகர் தமது பூலோக ஜீவியத்தில் துக்கம் நிறைந்தவரும் பாடுகள் அனுபவிக்கிறவருமாகவே இருந்

தார். அவர் ஒரு நாளும் சிரித்ததில்லை. நான் பல பாவங்களைச் செய்தும் சந்தோஷப்படுகிறேன். அவர் பரிசுத்தரும் பாவமில்லாதவருமாயிருந்தும் வியாகுலத்தோடு காலம் கழித்தார். என் வியாகுலத்தை மாற்ற அவர் வியாகுலப்பட்டு, என் கசப்பை யுண்டு கலங்குகிறார்.

### ஜெபம்

இரட்சகா, இந்த வியாகுலம் உமக்கேன்? இந்தத் துக்கம் உமக்கு வரவேண்டியதில்லையே. நானல்லோ மயங்க வேண்டும், கலங்கவேண்டும்; நான் நகைக்கும்படி தேவரீர் தவித்து வேதனைப்பட்டு ஜெபித்தீர். உமது வியாகுலத்தால் என் துக்கத்தை மாற்றிவிட்டீர். பிதாவே உமது குமாரனின் வியாகுலத்தினிமித்தம் உமது மலர்ந்த முகத்தை எனக்குக் காட்டும்.

## 2. இயேசுவின் இரத்த வேர்வை

'வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது' (லூக். 22:43, 44).

### தியானம்

இயேசுவின் மூன்றுதடவை ஜெபமும் அவருக்குக் கனத்த பாடாக இருந்தது. அவர் சோர்ந்துபோனார். அவர் இன்னும் படவேண்டிய இம்சைகள் அதிகமிருந்ததால் அதற்கு வேண்டிய சரீரபெலனை பரத்திலிருந்து பெற்றுக் கொண்டார். மற்றபடி கெத்செமனேயின் வியாகுலம் அவரைக் கொன்றுபோடலாம்.

### ஜெபம்

பிதாவே, இந்த இரத்தச் சொட்டுகளைக் கண்ணோக்கும். ஆதிச்சாபம் இதோடு மாறுகிறது. இந்த இரத்தம் எனக்காக விழுகிறது. இந்த இரத்தச் சொட்டுகள் என் ஆவியின்மேல் விழுவதாக. இந்த இரத்த வேர்வையினிமித்தம் என் பாவங்

களை மன்னியும். இயேசுவே உமக்கு ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்.

## 3. யூதாசின் முத்தம்

'யூதாஸ் வந்தவுடனே அவரண்டையில் சேர்ந்து ரபீ, ரபீ, என்று சொல்லி அவரை முத்தஞ்செய்தான்; அப்பொழுது அவர்கள் அவர்மேல் கைபோட்டு அவரைப் பிடித்தார்கள். இயேசு அவனை நோக்கி: யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய் என்றார்' (மாற். 14:45,46; லூக். 22:48).

### தியானம்

இந்த யூதாசைவிட நான் நல்லவனல்ல. அவன் ஒரே தரம் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான், நான் பலதடவையும் என் பாவங்களால் அவரைக் காட்டிக் கொடுத்தவன் என்று உணருகிறேன்.

### ஜெபம்

நானும் யூதாசைப்போல குரு துரோகிதான். பிதாவே, என் துரோக மனத்தையும் மன்னித்து என்னை ஆதரியும். யூதாசின் சதிநேரத்திலும் அவனோடு பேசின இயேசுவே எனக்கு இரங்கும்.

## 4. இயேசு கட்டப்பட்டார்

'அப்பொழுது போர்ச்சேவகரும், ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனும், யூதருடைய ஊழியக்காரரும், இயேசுவைப் பிடித்து, அவரைக் கட்டி, முதலாவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்' (யோவா. 18:12,13).

### தியானம்

களவு முதலிய குற்றங்களைச் செய்த அநேகர் என் கண் காண கைவீசி நடந்து திரிகிறார்கள்; என் நேசரே, நீர் களவு செய்தீரோ? கன்னமிட்டீரோ? நீர் செய்த எந்தக் குற்றத்துக்கு இப்படிக் கட்டுண்டு போனீர்

ஐயா? நான் ஏதாவது திருடினதுண்டானால் உன் மாமி சத்தை எடுத்ததும், உன் குற்றங்களைச் சுமந்ததும் உன்னை நேசித்ததும் தான் அப்பா! உன் பாவக்கட்டை அவிழ்த்த போது அக்கயிறு என்னை இப்படிக் கட்டுகிறது.

## ஜெபம்

பரமபிதாவே, இவ்வளவு நேசமான இரட்சகரை எனக்குத் தந்தீரே! எனக்காகக் கயிறுகளால் கட்டப்படவும், கைதியாகவும் உமது குமாரனைத் தாழ்த்தினது எவ்வளவு தயவு.

என் நேச இயேசுவே, என்னைக் கட்டின பாவக்கயிற்றை உமது கட்டுகளால் மாற்றினதற்காக உமக்கு ஸ்தோத்திரம்; என்னை உமது அன்பின் கயிற்றால் கட்டிக்கொண்டுபோய் உமது பிதா முன் நிறுத்தி நான் இவனை மீட்டேன் என்று சொல்லும்.

## 5. இயேசு அறையப்பட்டார்

'சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான்' (யோவா. 18;22).

## தியானம்

உன்னதமான தேவன் பாவியான சேவகனால் அடிபட்டார். ஆனாலும் அவரை என் பேச்சால் அடித்ததுண்டு. அவன் கையால் ஒரு தரம் அறைந்தான் நான் வாயால் அனந்த அறை அறைந்த பாவி. பவுல் அப்போஸ்தலனை, அடியுங்கள் என்றவுடனே, அதை சகியாமல் எரிச்சலானார் (அப். 23:3). இயேசுவோ அடிபட்டும் பொறுமையாயிருந்தார்.

## ஜெபம்

நேச இயேசுவே, உம்மை அந்த துஷ்டன் அடித்த அடி எனக்குப் படவேண்டியது. நான் தினந்தோறும் அடிபடவேண்டிய பாவி. நீர்பட்ட அடியால் என் கன்னத்தில்

படவேண்டிய அடிகளெல்லாவற்றையும் மாற்றினீர். பிதாவே, உமது குமாரன் பட்ட அடியினிமித்தம் எனக்கு வரவேண்டிய அறைகளனைத்தையும் நிறுத்தி, உமது கரத்தால் என்னை ஆதரியும்.

## 6. இயேசுவை பேதுரு மறுதலித்தான்

'நீங்கள் சொல்லுகிற மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் கூவிற்று' (மாற். 14:71,72).

### தியானம்

இவ்வளவு பள்ளத்திலும் பேதுரு விழுவானா? இப்படியும் அவன் மறுதலிப்பானா? மலைமேடு பள்ளமாய் மாறுமா? ஆம், அவன் கடல்மேலும் நடப்பான், கடலுக்குள்ளும் அமிழுவான். நானும் இப்படிப்பட்ட பாவிதான். இவனைப் போல் நானும் கிறிஸ்தவர்கள் நடுவில் அவரைப் புகழ்ந்தும், புறமதஸ்தர் நடுவில் அவரை இகழ்ந்துமிருக்கிறேன்.

### ஜெபம்

இயேசுவே பேதுருமாத்திரம் உம்மை மறுதலிக்கவில்லை. நானும் அடிக்கடி உம்மை மறுதலித்து உமது நாமத்தை அவமதித்ததுண்டு. மறுதலித்த பேதுருவைக் கண்ணோக்கி, அவனை அழப்பண்ணி, மன்னித்தீரே. என்னையும் நோக்கிப் பார்த்து என் நன்றிகேட்டை மன்னித்து என்மேல் கிருபையாகும் ரட்சகா!

## 7. ஆசாரியன் வீட்டேப்பாகேள்

'அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள். சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். வேலைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்' (மத். 26:67,68; மாற். 14:65).

### தியானம்

ஆசாரியன் வீட்டில் இயேசு முகத்தில் துப்பப்பட்டார்; தலையில் குட்டப்பட்டார்; முகம் மூடப்பட்டார்; வேலைக்காரரால் அடிபட்டார். இவ்வளவு அவமானத்துக்கும் காரணன் நான்தான்; என் பாவம்தான். துஷ்டர் இப்படிச் செய்தது அதிசயமல்ல, அது அவர்கள் வழக்கம்; என் இயேசு அவைகளை எனக்காக சகித்த அன்பு என்னைப் பிரமிக்க செய்கிறது.

### ஜெபம்

பிதாவே உமது குமாரன் அநுபவிக்கும் அவமானத்தைப் பாரும்! என்னிமித்தம் இவ்வளவு அவமானம் பட்டால்தான் நான் படவேண்டிய அவமானம் மாறும் என்று காண்கிறேன். இந்த எல்லா அவமானங்களையும் பார்த்து இவைகளினிமித்தம் எனக்கு மன்னிப்பையும் உமது குமாரனுக்குக் கனமகிமையையும் கொடுத்தருளும்.

## 8. ஏரோதுவின் பாடுகள்

'ஏரோது தன் போர்ச்சேவகரோடு கூட அவரை நிந்தித்துப் பரியாசம் பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி அவரைப் பிலாத்துவினிடத்துக்கு அனுப்பினான்' (லூக். 23:11).

### தியானம்

ஏரோதுவை இயேசு நரி என்று சொன்னார். (லூக். 13:33). நரிக்கு முன் ஆட்டுக்குட்டி போனவுடன், அதைப் பீறிப்போடப் பார்த்தது. ஆனால் இயேசு ஆட்டுக்குட்டி மாத்திரமோ; அவர் யூதக்கோத்திர சிங்கக் குட்டியாயுமிருந்தார். அவருடைய மவுனம், அவரில் அடங்கியிருந்த தெய்வீகத்தை ஏரோதுவுக்கு உணர்த்தினாலும் அதைக் கவனியாமல், இயேசுவைப் பைத்தியக்காரர் வரிசையில் சேர்த்து நடத்தினான்.

ஜெபம

தேச இயேசுவே, தேவரீர் ஏரோதுவின் முன் மௌன மாய் நின்று அவன் பாடுகளைச் சகித்தீர்; என்னை ஞானி யாக்க தேவரீர் பைத்தியக்காரனுக்கப் பட்டீர். ஆ உன்னத ஞானமே, ஞானத்தின் ஊற்றே பரமஞானத்தில் எனக்கு ஒரு பங்கு தாரும். பிதாவே, என் பாவத்தினிமித்தம் நான் வாய்மூடி நிற்கவேண்டியதற்குப் பதிலாக இயேசு நின்றார். அவர் நிமித்தம் அடியேனை மன்னியும்.

## 9. இயேசுவைப் புறக்கணித்தல்

'இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலை யாக்கும்' (லூக். 23:18).

தியானம்

கள்ளனும் கொலைபாதகனுமான பரபாசிலும் என் இரட்சகர் தாழ்த்தப்பட்டாரே! அவர் தாமே தாழ்ந்ததெல் லாம் போதாதென்று, சத்துருக்களும் அவரைத் தாழ்த்து கிறார்கள். சிலுவைமட்டும் தாழப்போகிறவருக்கு இது பெரிய காரியமா? கள்ளருக்கும் கொலைபாதகருக்கும் அவர் இரட்சகராகும்படி இப்படித் தாழ்ந்தார்.

ஜெபம்

பிதாவே, நான் கள்ளன். உமது கிருபைகளை அநுப வித்து உமக்குத் துரோகம் பண்ணின கள்ளன், உமது சபையின் வாழ்வுகளைக் கொள்ளையிட்டு பாவம் செய்கிற கள்ளன். என் பாவத்தால் அநேக ஆத்துமாக்களைக் கொலை செய்த கொலைபாதகன். நான் இக்காலத்து பரபாஸ். இயேசு வின் கைதி நிலைமையினிமித்தம், என் சங்கிலியை வெட்டி என்னை விடுதலையாக்கும்.

## 10. இயேசு முள்முடி சூட்டப்பட்டார்

'பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித் தான். போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்

கியை அவருக்கு உடுத்தி; யூதருடைய இராஜாவே, வாழ்க என்று அவரை வாழ்த்தி, அவரைச் சிரசில் கோலால் அடித்து, அவர்மேல் துப்பி முழங்கால் படியிட்டு அவரை வணங்கினார்கள்' (மாற். 15:17–19; யோவா. 19:1,2).

### தியானம்

என் நேச இயேசுவே, எனக்கு ஜீவமுடி தருகிற உமக்கு முள்முடியோ! வெள்ளை அங்கி தருபவருக்கு சிவப்பங்கியே! என் இரட்சண்ய இராஜாவே நீர் வாழ்க. இந்த உடைகளால் நீர் எனக்கு இரட்சண்ய இராஜாவாக விளங்குகிறீர். சமுத்திர ஆழம் போகப்போக அதிகப்படுவதுபோல உமது பாடுகளும் அதிகப்படுகிறது. இராஜாக்களுக்குப் பரிமள தைலங்கள் வாசனையாகும்; உமக்கோ உமிழ் நீர்தான் கிடைத்தது. இந்த எல்லா அவமானமும் உம்முடைய தெய்வீகத்தை அழிக்குமோ? அழிக்கவேமாட்டாது; அழிக்கவேமாட்டாது.

### ஜெபம்

பிதாவே, உமது நேசகுமாரன் பாவிகளால் படும் நிந்தைகளைப் பாரும். இப்படி உமது குமாரனைத் தாழ்த்தி எங்களை நேசித்ததென்ன? உன்னத நேசம்தான். இந்த முள்முடியும், கிழிந்த அங்கியும், பரியாசமும், நிந்தையும் துப்புதலும், எல்லாம் எனக்கு வரவேண்டியது. என்னிமித்தமே உமது குமாரன் இப்படிப்பட்ட நீசப்பாடுகளுக்குள்ளானார். நானொருவன் இவ்வுலகத்தில் இல்லையானால் இந்தப் பாடுகள் நேரிட்டிராது. இந்தப் பாடுகளின் பலன் என்னில் வெளியரங்கமாகும்படி இவைகளினிமித்தம் என்னை மன்னித்து ஆதரியும் தேவா!

## 11. இயேசுவின் மரணாக்கினை

'அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான்' (யோவா. 19:16).

### தியானம்

பிலாத்து இயேசுவை விசாரணை செய்து, குற்றமில்லை என்று கண்டான்; தன் கையையும் கழுவினான். ஏரோது

வும் குற்றம் காணவில்லை. அவர் குற்றமற்றவர். இயேசு மரணத்திற்குத் தீர்ப்புப் பெற்றது அவருடைய குற்றத்துக்காக அல்ல; என்னுடைய பாவத்துக்காக. எனக்காக தேவன் அவரை மரணத்திற்குக் குட்படுத்தினார்.

## ஜெபம்

இக்காலத்தில் கொலைபாதகர் அநேகர் தப்பித் திரிகிறார்கள். குற்றமற்ற இயேசுவே நீர் மரணத்திற்குக் குட்படுகிறீர். என்மேல் கூறப்படவேண்டிய தீர்ப்பு உமது பேருக்கு எழுதப்பட்டுப்போயிற்று. பிதாவே உமது குமாரனின் மரணத்திற்குத் தீர்ப்பினிமித்தம் என்மேலுள்ள உமது தீர்ப்பை மாற்றி எழுதியருளும். இயேசு என் பிணையாளர்.

## 12. இயேசு சிலுவை சுமத்தல்

'அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயுபாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுபோனார்.' (யோவா. 19:17).

## தியானம்

சிலுவை மரணத் தீர்ப்புப் பெற்றவர்கள் தங்கள் சிலுவையைச் சுமக்கவேண்டியது. இயேசுவும் அப்படிச் சுமந்தார். அவருக்கு சிலுவையின் பாரம் மாத்திரமல்ல, அதின் மேல் ஏற்றப்பட்டிருந்த சர்வலோகத்தின் பாவமூட்டைகளுமிருந்தன. அது பிதாவின் கண்ணுக்கும், இயேசுவின் கண்ணுக்கும் விசுவாசியின் கண்ணுக்கும் மாத்திரம் தெரியும். சாதாரண கண்களுக்கு வெறும் சிலுவைதான் தெரியும். அந்தப் பாவமூட்டைகளில் என் பேர் எழுதிய பாவமூட்டைதான் அளவில் பெரிதாயும் பாரத்தில் கனமாயுமிருந்தது. என் மூட்டை ஒன்றை நீக்கிவிட்டால், பாவ தண்டனையின் பாரம் வெகு லேசாகிவிடும் என்று நினைக்கிறேன்.

## ஜெபம்

என் நேச இயேசுவே, உமது மேலிருக்கும் கனத்த பாரமென்ன? இதை எங்கே சம்பாதித்தீர்? ஐயோ இவை

அனைத்தும் பாவ பாரமல்லவோ. என்பாவ மூட்டையையும் இங்கே காண்கிறேன். அதின் பாரத்தால் நீர் சிலுவையை இழுத்துக் கொண்டுபோகிறீர். இப்படி காடு முரடான கற்பாறையில் நான் இழுக்கப்பட்டு காயப்படவேண்டியது நியாயம். நீர் என் பிணையாளியாகி என்பாவத்தைச் சுமக்கிறீர். என் நேச இயேசுவே உம்மை வணங்குகிறேன்.

பிதாவே உமது குமாரன் என் பாவங்களைச் சுமந்து தீர்த்தார். அவர் நிமித்தம் எனக்கு மன்னித்து, என்னை ஆதரித்தருளும்.

## 13. இயேசு சிலுவையில் அறையப்படுதல்

'அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடேகூட வேறிரண்டுபேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள்' (யோவா. 19:18).

### தியானம்

சிலுவை மரணத்தில் பல முறையுண்டு. அதில் ஆணியடிப்பது குரூரமான முறை. இயேசுவுக்கு இந்த முறைதான் கையாடப்பட்டது. அந்த ஆணிகள் ஒரு விரல் பருமனும், ஒரு அடி நீளமுமாயிருக்கவேண்டியது. மற்றபடி கையையும் சிலுவையையும் ஊடுருவமாட்டாது. குற்றமற்ற இயேசுவைக் குற்றவாளியாக ஜனங்கள் எண்ணிக்கொள்ள குற்றவாளிகளோடு கொலை செய்கிறார்கள்.

### ஜெபம்

ஆ, என் கைகள் மேலும் கால்கள் மேலும் அடிக்கப்படவேண்டிய ஆணி என் இயேசுவுக்குக் கிடைக்கிறது என் பாவத்தாலன்றி வேறில்லை. இந்த நீசர் கையால் இப்படி நீசமரணம் வருமென்று அறிந்தும், இதை வாஞ்சித்து பரலோகம் விட்டு வந்தீரே! இது எவ்வளவு தயவு. பிதாவே உமது குமாரனின் சிலுவைப்பாடுகளினிமித்தம் என் பாவங்களை மன்னியும்.

## 14. சிலுவை வாசகங்கள்

(1) 'பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்' (லூக். 23:34).

ஜெபம்

இயேசுவே நான் செய்த எல்லாப் பாவங்களையும் மன்னியும்.

(2) 'இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' (லூக். 23:43).

ஜெபம்

இயேசுவே, என்னைப் பரதீசில் சேர்த்தருளும்.

(3) 'ஸ்திரீயே, அதோ, உன் மகன்; சீஷனே அதோ உன் தாய்' (யோவா. 19:26,27).

ஜெபம்

இயேசுவே, நான் என் பெற்றோர், பெரியோரைக் கனப்படுத்தும்படி கிருபை செய்யும்.

(4) 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்' (மாற். 15:34).

ஜெபம்

பிதாவே, உமது குமாரன் கைவிடப்பட்டதினிமித்தம் என்னைக் கைதூக்கியருளும்.

(5) 'தாகமாயிருக்கிறேன்' (யோவா. 19:28).

ஜெபம்

எனக்காக தாகமடைந்த இயேசுவே, உமது தாகத்தால் என் ஆத்தும தாகத்தை நீக்கியருளும்.

(6) 'முடிந்தது' (யோவா. 19:28).

ஜெபம்

என் இரட்சிப்பின் கிரியையைப் பூரணமாய் முடித்த இயேசுவே, உமக்கு நமஸ்காரம். இதோடு என் பாவம் முடிவடைவதாக.

(7) 'பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' (லூக். 23:46).

ஜெபம்

பிதாவே, என் ஜீவனையும் சுகத்தையும் உமக்கே ஒப்புக்கொடுக்கிறேன். என் மரணவேளையில் நீர் என் சகாயராகி, என் ஆவியை அங்கிகரித்தருளும்.

## 15. இயேசுவின் மரணம்

'இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்' (யோவா. 19:30).

'இயேசு, பிதாவே உமது கைகளில் உமது ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார். இப்படிச் சொல்லி ஜீவனைவிட்டார்' (லூக். 23:46).

### தியானம்

ஆத்துமாவே, இயேசு என்னிமித்தம் தேவ சாபத்தின் கசப்பை ருசித்ததோடு, காடிக் கசப்பையும் ருசித்தார். அந்தக் காடிக் கசப்பு என் பாவக் கசப்பை அவர் ருசித்ததை உணர்த்திற்று.

அவர் என் ரட்சிப்பின் வேலையை எல்லாம் முடித்து இளைப்பாறி தலைசாய்ந்தார்.

அவர் பெலன் குன்றிச் சாகாமல், பூரண பலத்தோடு தமது ஆவியை என் பிராயச்சித்த பலியாக ஒப்புக்கொடுத்து மரித்தார். என் இருதயத்திலிருந்துண்டான சகல பாவமும் நிவிர்த்தியாகும்படி அவருடைய இருதயத்தை அவர் கிழித்து, ஜீவக் கூட்டை உடைத்து ஜீவனைவிட்டார்.

### ஜெபம்

எனக்காக தேவ சாபக்காடியைக் குடித்து தலைசாயும் தேவனே! என் பாவக் கசப்பை உண்டு, அதின் விஷத்தால் சாகும் நேசரே! உம்மை பக்தி விநயத்தோடு பணிகிறேன்.

என் இரட்சிப்பை முடித்தவரே இரட்சண்ய இளைப்பாறுதலை எனக்குத் தாரும்.

பிராயச்சித்த பலியாக உமது இருதயத்தை உடைத்து உமது ஜீவனைப் போக்கின நேசரே! என் இருதயம் உம்மைப் பற்றும் நேசத்தால் பொங்கி உடைவதாக. பிதாவே, இந்த மாசில்லாத பலியைக் கண்ணோக்கி எனக்குப் பாவ மன்னிப்பும், மோட்ச வாழ்வையும் தயவாகத் தந்தருளும், ஐயா!!

## 16. இயேசுவின் இரத்தவெள்ளம்

'போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது' (யோவா. 19:34).

### தியானம்

என் பாவத்தையும் அழுக்கையும் நீக்க இப்பொழுது ஒரு நல்ல ஊற்று கிடைத்ததற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். நான் இனி அன்றாடகம் பாவத்தால் அழுக்காகும் போது இந்த ஊற்றண்டை வந்து என்னையும் என் அங்கியையும் கழுவிச் சுத்தமாக்குவேனாக. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி என்னைச் சுத்திகரிக்கிறது.

### ஜெபம்

என் நேசரே, நீர் ஜீவனாலும் சாவாலும் எனக்கு நன்மை செய்கிறீர். உம்முடைய சாவு என்னுடைய ஜீவன், நீர் மரித்தபின் உமது ஜீவனை உமது விலாவின் வழியாய் எனக்கு ஊட்டுகிறீர். என் நெஞ்சை உமது நேச அம்பால் எய்து காயப்படுத்தி, உமது விலாவின் தைலத்தை என் விலாவில் செலுத்தும். விலாவோடு விலா ஒட்டினால் உமது அன்பு எனக்குள் செல்லும்.

# 14. கீத தியானம்

## I. தஞ்சகீதம்

### 7s. Red head

1. கெத்செமனே தோட்டத்தில்
என்னை மீட்க வென்று நீர்
ரத்த வேர்வை ஊற்றினீர்
ரட்சகா! தஞ்சம்! தஞ்சம்!

2. சிவப்பங்கி முண்முடி
சூடி; எனக்கு நீதி
அங்கி, ஜீவ கிரீடம்
தந்தவா! தஞ்சம்! தஞ்சம்!

3. சிலுவைப் பாரம் ஏந்தி
பாவ பாரம் மிறக்கி
மானிடரை ரட்சித்தீர்
இயேசுவே! தஞ்சம்! தஞ்சம்!

4. சாலேமின் வீதி வழி
சிலுவையால் இடறி
விழுந்து எழுந்துபோம்
ரட்சகா! தஞ்சம்! தஞ்சம்!

5. கொல்கொதா மலைஏறி
கொலை பாதகரோடு

சிலுவையிலே தொங்கும்
இயேசுவே! தஞ்சம்!
தஞ்சம்!

6. சர்வலோக பாவத்தை
நாசமாக்கி மன்னிப்பைத்
தரும் ஊற்றைத் திறந்த
இரட்சகா! தஞ்சம்!
தஞ்சம்!

7. எனக்காக இயேசுவின்
கைகள், கால்கள், விலா
வில்
உண்டான காயம்
ஐந்தும்
எந்நாளும்! தஞ்சம்!
தஞ்சம்!

8. குருசில் தலை சாய்ந்தே
மாண்ட நேச இயேசு
வே!
சாய்ந்த தோளில் சாய்கி
றேன்
ரட்சகா! தஞ்சம்! தஞ்
சம்! ஆமென்.

## II. வியாகுலம்

### 'St. Philip'

1. ஏசுவே இந்நேரத்தில்
முழங்கால் படியிட்டு
புலம்புமென்னைக் கேளும்.

2. உமது பெருமூச்சால்
உமதகோரப் பாடால்
மனம் பொங்குவதாக.

3. தலையில் முண்முடியோ!
கையில் மூங்கில் தடியோ!
ஆ! இது என் பாவமே.

4. முகத்தில் உமிழ் நீரோ!
முதுகில் சிலுவையோ!
ஆ! இது என் பாவமே.

5. கைகாலில் ஆணிகளோ!
விலாவிலே ஈட்டியோ!
ஆ! இது என் பாவமே.

6. நீர் பட்ட ஈட்டிக்
குத்தும்
நீர் விட்டரத்த ஆறும்
என் னெஞ்சைப் பிளக்
குதே.

7. குத்துண்ட உன் விலா
வில்
குடியேற இடம் தா
அதில் நான் முழுகட்
டும்.

8. ஏசுவே! என் ஏசுவே!
குருசில் தொங்கும்
ஆடே!
சேரும் என்னை மோட்
சத்தே. ஆமென்.

# III. பிரலாப விண்ணப்பம்

1. நிந்தை, துக்கம், நோ,
வருத்தம்
எங்கட்காய் சகித்த
இயேசு கேளும் எங்கள்
ஜெபம்
ஆறுதலளிக்க.

2. மூன்று சீடர் தூங்கும்
போதும்
கெத்செமனே காவில்
பட்ட கஸ்தியை நினையும்,
அடியார்கள் நோவில்.

3. முத்தத்தால் காட்டிக்
கொடுத்த
யூதாசைக் கடிந்தும்
புத்தி சொன்ன மா பலத்த
பட்ச இயேசு! கேளும்.

4. கசையடி யுத்தரித்தீர்,
பரியாச அங்கி
முள் முடியையும் தரித்தீர்
மூங்கிலடி தாங்கி.

5. அறையும் சிலுவையிலே
என்று துஷ்டர் கூவ
சாகச் சம்மதித்துக்
கொண்ட
இயேசுவே நீர் வாழ்க!

6. சிலுவை சுமந்த நேசம்
கசப்பான பானம்
அருந்தினீர் திருவுளம்
கொண்டு எம்மைக்
கேளும்.

7. ஏழுவாசகம் உரைத்தீர்
பொற்சிரசைச் சாய்த்
தீர்
மரணத்தை உத்தரித்தீர்
மானிடரை மீட்டீர்.

8. மரத்திலே அறைந்தார்
கள்
மாண்டீர் மாநேசத்தால்
அகத்திலே அறைகிறேன்
அன்பின் ஆணியினால்.

## ஜெபம்

மன உருக்கமும், பாவிகள்பேரில் தயவுமுள்ள பிதாவே, இதோ தேவரீருடைய திருக்குமாரனுடைய மரண வரலாறுகளை உமது சமுகத்தில், என் அற்ப உணர்ச்சிகளால் தெரிவித்தேன். அந்தப் பாடுகளனைத்தையும் பார்த்து என் பாவங்களையும் அவைகளுக்குரிய தண்டனைகளையும் என்னை விட்டு மாற்றியருளும். அவை அனைத்தும் என்னுடைய

பாவங்களினிமித்தமே அவருக்குச் சம்பவித்தது. ஆ, நான் எவ்வளவு பெரும்பாவியாயிருக்கிறேன்! பிரதான பாவியாகிய என்மேல் உம்முடைய இரட்சிப்பின் அன்பு பிரதானமாய் விளங்குவதாக. பிரதான பாவியாகிய என்னை பிசாசு கைப் பற்றிக்கொள்ளாமல், என்னை மீட்டருளும். நான் பிரதான பாவி மாத்திரமோ? இல்லை. பிரதான பாவிகளில் பிரதான மானவனாயிருக்கிறேன். பாவிகளின் அட்டவணையில் என் பேர் முதலாவதானது. முதல்தரமான, முதலாவதாய் நிற்கிற பாவியாகிய என்னை ரட்சித்து, அப்பால் அடுத்த பாவிகளைக் கவனியும் தேவா!

உமது குமாரனுடைய வியாகுலம், பெருமூச்சு, ஜெபங்கள், இரத்தவேர்வை, கட்டுகள், குட்டுகள், பரியாசங்கள், நிந்தைகள், அவமானங்கள், உமிழ்நீர், அடிகள், காயங்கள், முள்முடி, சிவப்பங்கி, சிலுவை, ஆணிகள், ஈட்டிக்காயம், தலைசாய்தல், மரணம், அடக்கம் இவையெல்லாம் என் பாவநிவாரணத்துக்காக அவருக்கு வந்தன. அவையனைத்தையும் இந்நேரத்தில் உமக்குத் தெரிவிக்கிறேன். இவைகளினிமித்தம் என் பாவங்களை மன்னித்து உமது பந்தியின் வாழ்வுகளை எனக்குத் தந்தருளும்.

இதுமுதல் நான் பாவம் செய்யாமலும் உமது அன்பை அவமதியாமலும் நடந்துவரும்படி உமது பரிசுத்த ஆவியை எனக்குத் தந்தருளும். இந்த விண்ணப்பத்தை என் இரட்சகரும் மீட்பருமாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் கேட்டருளும், பிதாவே! ஆமென்.

## வேறு

'சர்வ வல்லமையுள்ள தேவனே எங்கள் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவானவர் தேவரீருடைய வீட்டாராகிய எங்களுக்காகக் காட்டிக்கொடுக்கப்படவும், அக்கிரமக்காரருடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் மரணமடையவும், மனதாரச் சம்மதித்ததினிமித்தம் எங்களைக் கிருபையோடே கண்ணோக்கிப் பார்க்கவேண்டுமென்று, எங்கள் ரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம்'. ஆமென்.

# 15. இயேசுவின் மரண உபதேச வசனங்கள்

கவனிப்பு:—உனக்கு இருக்கிற சாவகாசத்துக்குத்தக்கதாக பின்வரும் மரண உபதேச சத்தியங்களைத் தியானித்து ஜெபிப்பாயாக.

1. 'அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்' (ரோம. 6:10).

2. 'கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை (வாதையை) எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்' (2 கொரி. 4:10).

3. 'அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே ஒப்புரவாக்கினார்' (கொலோ. 1:21).

4. 'தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே' (1 தெச. 5:10).

5. 'தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்' (எபி. 2:9).

6. 'மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும்' மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் (எபி. 2:14,15).

7. 'முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும் பொருட்டு அவர் மரண மடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்' (எபி. 9:15).

8. 'நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ள வருமாயிருக்கிறேன்; மரித்தேன், ஆனாலும் இதோ, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத் திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவரா யிருக்கிறேன்' (வெளி. 1:17,18).

9. 'இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது' (எபே. 1:7).

10. 'முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்' (எபே. 2:13).

11. 'அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதா னத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத் திலுள்ளவைகள் யாவையும், அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று' (கொலோ. 1:20).

12. 'குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து வின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே, மீட்கப்பட்டீர் களென்று அறிந்திருக்கிறீர்களே' (1 பேது. 1:19).

13. 'அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.'

14. 'ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள், கேட் கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கட வன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்' (வெளி. 22:17).

---

# எங்களின் அண்மைக்காலத் தியான நூல்கள்

ஏழு வார்த்தைகள்
கிறிஸ்தவ ஜீவியம்
கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்
என் சுயசரிதை
நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்
பரமானந்தம் ஐயரின் தியானக் குறிப்புக்கள்
— எஸ். பரமானந்தம்

நிமிடச் செய்திகள்
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

கண்ணீரைப் போக்கும் காலைப்பொழுது
— ஜான் எச்.பீட், தமிழாக்கம் : தி. தயானந்தன் பிரான்சிஸ்

உயர, உயர....
ஆண்டவரே சொல்லும் அடியேன் கேட்கிறேன்
— கே.ஜி. எபநேசர்

எல்லாம் இயேசுவே
— எபநேசர் டிக்கிகஸ்

சிறுவர்களே உங்களுக்கு
— ராஜம்மாள் டிக்கிகஸ்

யாமறிந்த நூல்களிலே...
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

மோட்சப் பிரயாணம்
— ஜான் பனியன், தமிழாக்கம் : சாமுவேல் பவுல்

தியான ஆலயம்
கர்த்தருடைய ஜெபம்
உங்களோடு ஒரு நிமிடம்
ஆத்தும நேசரின் அங்கமகத்துவம்
தியானச் சோலை
— சாமுவேல் பவுல்

CLS

**PUTHIA ĒRPAṬṬUP PURUṢHAR**
By Samuel Paul
விலை ரூ. 90.00 (இந்தியாவில் மட்டும்)